தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

31.05.2013 A.M

## கர்நாடகத்தில் அணைகள் நிரம்பினால் தமிழகத்துக்கு தண்ணீர்



கர்நாடகத்தில் அணைகள் நிரம்பினால், தமிழகத்துக்கு காவிரியில் இருந்து தண்ணீர் திறந்துவிடப்படும் என்று, அந்த மாநில முதல்வர் சித்தராமையா தெரிவித்தார்.

ஜூன் மாதத்திற்குள் மழை பெய்து அணைகள் நிரம்பும் என்று நம்புவதாகவும், அவ்வாறு நிரம்பினால் தமிழகத்திற்கு தண்ணீர் தருவதில் எந்த பிரச்னையும் இருக்காது என்றும் அவர் கூறினார்.

இதுகுறித்து பெங்களூரில் வியாழக்கிழமை செய்தியாளர்களிடம் அவர் மேலும் கூறியது:

கர்நாடகத்தில் வறட்சி நிலவினாலும், காவிரியிலிருந்து தமிழகத்திற்கு உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுப்படி ஏற்கெனவே தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இந்த நிலையில், காவிரியிலிருந்து தமிழகத்திற்கு தண்ணீரை கர்நாடகம் திறந்து விடாததால், தமிழகத்தில் உள்ள காவிரி டெல்டா பகுதிகளில் பயிர்கள் நாசமடைந்துள்ளதாகவும், இதற்கு நஷ்டஈடு கேட்டும் அந்த மாநில முதல்வர் ஜெயலலிதா உச்ச நீதிமன்றத்தில் முறையீடு செய்துள்ளார். காவிரியில் தண்ணீர் இல்லாத போதும், பெங்களூர் உள்ளிட்ட பகுதிகளில் குடிநீர் பிரச்னை தலைதூக்கியுள்ள போதிலும் உச்ச நீதிமன்றத்தின் உத்தரவையடுத்து, காவிரியிலிருந்து தமிழகத்திற்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

கர்நாடகத்தில் கே.ஆர்.எஸ்., கபினி, ஹாரங்கி அணைகள் போதிய நீரின்றி வறண்டுவிட்டன. இதனால், பயிர்கள் நாசமாகியுள்ளன. குடிநீர் பிரச்னை அதிகரித்துள்ளது. இருப்பினும், தமிழக அரசு கர்நாடகத்தின் மீது பல்வேறு பிரிவுகளில் வழக்குத் தொடர்ந்த வண்ணம் உள்ளது. இதற்கு நீதிமன்றத்தில் சட்டப்படி பதில் அளிக்க கர்நாடக அரசு முடிவு செய்துள்ளது.

தமிழக அரசு ரூ. 2480 கோடி பயிர் நஷ்டஈடு கேட்டு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவிற்கு கர்நாடகத்தின் சார்பில் வாதாடும் வழக்குரைஞர்கள் உரிய பதிலைத் தருவார்கள் என்றார் அவர்.

## நீலகிரியில் பலத்த மழை!



நீலகிரி மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் பரவலாக பெய்துவரும் மழை, மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழையின் தொடக்கமாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

நடப்பாண்டில் மே கடைசி வாரத்தில் தென்மேற்கு பருவமழை தொடங்குமென வானிலை ஆய்வு மையம் அறிவித்திருந்தது. அதற்கேற்ப உதகை உள்ளிட்ட மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் வியாழக்கிழமை பலத்த மழை பெய்தது.

இதனால், தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கி, வெள்ளம் போல பெருக்கெடுத்து ஓடியது. உதகையில் சேரிங்கிராஸ், கமர்சியல் சாலை, மார்க்கெட், மத்தியப் பஸ் நிலையம், ரயில் நிலையம், சிறுவர் பூங்கா, படகு இல்லம் உள்ளிட்ட தாழ்வான பகுதிகளில் சாலையிலேயே குளம்போல மழைநீர் தேங்கியது. இதனால் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது.

பலத்த மழை காரணமாக 3 மணி நேரம் படகு சவாரி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இருப்பினும் சுற்றுலா மையங்களில் சுற்றுலாப் பயணிகளின் கூட்டம் அதிகமாக காணப்பட்டது. உதகையில் பகல் 1 மணிக்கு தொடங்கிய மழை மாலை 4 வரை நீடித்தது. அதைத்தொடர்ந்து இரவிலும் லேசான பெய்தது. இந்த மழை தென்மேற்கு பருவமழையின் தொடக்கமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

## காவிரியிலிருந்து தமிழகத்திற்கு உச்சநீதிமன்றத்தின் உத்தரவுப்படி தண்ணீர் திறந்து விடப்படுகிறது: கர்நாடக முதல்வர் சித்தராமையா

கர்நாடகத்தில் வறட்சி நிலவினாலும் காவிரியிலிருந்து தமிழகத்திற்கு உச்சநீதிமன்றத்தின் உத்தரவுப்படி தண்ணீர் திறந்து விடப்படுகிறது என்று கர்நாடக முதல்வர் சித்தராமையா தெரிவித்தார்.

இது குறித்து அவர் வியாழக்கிழமை செய்தியாளர்களிடம் கூறியது: காவிரியிலிருந்து தமிழகத்திற்கு தண்ணிரை கர்நாடக திறந்து விடாததால், தமிழகத்தில் உள்ள காவிரி டெல்டா பகுதியில் பயிர்கள் நாசமடைந்துள்ளதாகவும், இதற்கு நஷ்டஈடு கேட்டு அம்மாநில முதல்வர் ஜெயலலிதா உச்சநீதிமன்றத்தில் முறையீடு செய்துள்ளார். காவிரியில் தண்ணீர் இல்லாத போதும், பெங்களூர் உள்ளிட்ட பகுதிகளில் குடிநீர் பிரச்னை தலைவிரித்தாடி வரும் வேளையிலும், உச்சநீதிமன்றத்தின் உத்திரவின் பேரில் காவிரியிலிருந்து தமிழகத்திற்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. கர்நாடகத்தில் கே.ஆர்.எஸ். கபினி, ஹாரங்கி அணைகள் வற்றிப்போய் உள்ளது. இதனால் பயிர்கள் நாசமாகியுள்ளது. குடிநீர் பிரச்னை அதிகரித்துள்ளது. இருப்பினும் தமிழக அரசு, கர்நாடகத்தின் மீது பல்வேறு பிரிவுகளில் வழக்கு தொடர்ந்த வண்ணம் உள்ளது. இதற்கு சட்டப்படியே நீதிமன்றத்தில் பதில் அளிக்க கர்நாடக அரசு முடிவு செய்துள்ளது. தமிழக அரசு ரூ. 2480 கோடி பயிர் நஷ்ட ஈடு கேட்டு உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவிற்கு கர்நாடகத்தின் சார்பில் வாதாடும் வழக்குரைஞர்கள் உரிய பதிலை தருவார்கள். ஜூன் மாதத்திற்குள் மழை வந்து அணைகள் நிரம்பும் என்று நம்புகிறேன். அணைகள் நிரம்பினால் தமிழகத்திற்கு தண்ணீர் தருவதில் எந்த பிரச்னை இருக்காது என்றார் அவர்.

## தென்மேற்கு பருவமழை: ஆட்சியர் அலுவலகத்தில் கட்டுப்பாட்டு அறை

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தென்மேற்கு பருவமழையையொட்டி 24 மணிநேரமும் செயல்படும் கட்டுப்பாட்டு அறை திறக்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் சி. சமயமூர்த்தி தெரிவித்தார்.

மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை தொடங்கவுள்ளதை அடுத்து பல்வேறு அரசுத் துறைகளும் மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆட்சியர்

அலுவலகத்தில் வியாழக்கிழமை ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணுடன் கட்டுப்பாட்டு அறை செயல்படுகிறது. இக் கட்டுப்பாட்டு அறை 24 மணி நேரமும் செயல்படும்.

பொதுமக்கள் இச் சேவையைப் பயன்படுத்தி மழை வெள்ள சேதங்கள் குறித்து தகவல் தெரிவித்து, பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கூட்டத்தில் ஆட்சியர் கேட்டுக்கொண்டார்.

சேரன்மகாதேவி சார் ஆட்சியர் ரோகிணி ராம்தாஸ், ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள்

துரைராஜன் (பொது) சுந்தரபாண்டியன் (நிலம்), கோட்டாட்சியர்கள் பெருமாள், க. ரமேஷ்

உள்ளிட்ட அரசின் பல்வேறு துறை அலுவலர்களும் பங்கேற்றனர்.

## தூத்துக்குடி மாவட்டத்தில் ஆந்திர வெங்காயம் விற்பனை

ஆந்திர மாநிலத்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட வெங்காயம், தூத்துக்குடி மாவட்டத்தில் பெருமளவில் விற்பனையாகி வருகிறது.

சின்ன வெங்காயத்தின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. கிலோ ரூ.80 வரை விற்பனையாகி வருகிறது. வழக்கமாக  திண்டுக்கல், திருநெல்வேலி மாவட்டங்களில் இருந்து தூத்துக்குடி மாவட்டத்துக்கு சின்ன வெங்காயம் விற்பனைக்கு வரும்.

ஆனால், அந்த மாவட்டங்களில் கடும் வறட்சி நிலவுவதால் சின்ன வெங்காய மகசூல் குறைந்துவிட்டது. இதனால், தூத்துக்குடிக்கு வரத்து முற்றிலும் தடைபட்டுள்ளது.

இந்நிலையில், ஆந்திர மாநிலத்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சின்ன வெங்காய விற்பனை தூத்துக்குடி மாவட்டத்தில் அதிகரித்துள்ளது. இந்த வெங்காயம் கிலோ ரூ.30 முதல் 40 வரை விற்கப்படுவதால் பொதுமக்களும் விரும்பி வாங்கிச் செல்கின்றனர்.

## தேசிய மீன்வளர்ச்சி வாரியதிட்டங்களைப் பெற விண்ணப்பிக்கலாம்

தூத்துக்குடி மாவட்டத்தில் மீன் சார்ந்த தொழிலில் ஈடுபடுபவர்கள், தேசிய மீன்வளர்ச்சி வாரிய திட்டங்களைப் பெற விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் ஆஷிஷ்குமார் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

இம் மாவட்டத்தில் தேசிய மீன்வளர்ச்சி வாரியம் மூலம் மீன் குஞ்சு உற்பத்தி, மீன்வளர்ப்பு, மீன்களைச் சந்தைப்படுத்துதல், மீன்பதனம், சில்லறை மீன் விற்பனை அங்காடிகள், மொத்த விற்பனை நிலையங்கள், விற்பனை வாகனங்கள் மற்றும் இதர வளர்ச்சிப் பணிகளுக்கு என

மானியத்துடன் கூடிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தனிநபர்கள், விவசாயிகள், சுயஉதவிக் குழுவினர் மற்றும் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு ஏற்றவாறு மானியத்துடன் கூடிய பல்வேறு திட்டங்கள் வழங்கப்பட உள்ளன. எனவே, மீன்தொழிலில் ஆர்வம் உள்ள தனிநபர்கள், சுயஉதவிக் குழுவினர் மற்றும் கூட்டுறவுச் சங்கத்தினர் தேசிய மீன்வளர்ச்சி வாரிய திட்டங்களை மீன்துறை உதவி இயக்குநர் (கடல்வளம்), மீன்பிடி துறைமுக வளாகம், தெற்கு கடற்கரைசாலை, தூத்துக்குடி628 001 என்ற முகவரியில் தொடர்பு கொண்டு தெரிந்து கொண்டு விண்ணப்பித்து பயன்பெறலாம் என செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருவாரூரில் பலத்த மழை

திருவாரூரில் வியாழக்கிழமை மாலை பலத்த மழைப் பெய்தது.

திருவாரூர் நகரில் காலையிலிருந்து வெட்கையாக இருந்தது. மதியம் ஒரு மணியளவில் இருந்து குளிர்ந்த காற்று வீசத் தொடங்கியது. மாலை 4 மணியளவில் வானம் கருமேக மாக இருந்து மழைக் காற்று வீசத் தொடங்கியது. பின்னர் மாலை 5.30 மணியிலிருந்து சுமார் 6.30 மணி வரை பலத்த மழைப் பெய்தது. இதனால் திருவாரூர் பேருந்து நிலைய த்தில் தண்ணீர் ஆறு போல் ஓடியது. பள்ளமான சில இடங்களில் நீர்த் தேங்கியுள்ளது. இந்த மழையால் விவசாயிகள் பெரிதும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## தேனீ வளர்ப்பு பயிற்சியில் பங்கேற்க அழைப்பு

பெரம்பலூர் மாவட்டம், வாலிகண்டபுரத்தில் அமைந்துள்ள ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் ஜூன். 5ம் தேதி இலவச தேனீ வளர்ப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது.

இதுகுறித்து, வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் (பொறுப்பு) ஜெ. கதிரவன் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் தேனீ வளர்ப்பு தொடர்பான இலவச பயிற்சி ஜூன். 5ம் தேதி காலை 10 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெற உள்ளது. பயிற்சி பெற ஆர்வம் உள்ள விவசாயிகள் பங்கேற்று பயன்பெறலாம்.

எனவே, பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோர் தங்களது பெயர் மற்றும் முகவரியை நேரில் அல்லது 04328 293592 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு, பெயரை முன்பதிவு செய்து கொள்ளலாம் என்றார் அவர்.

## வறட்சி நிவாரண நிதி:வங்கி கடனுக்கு வரவு வைக்கும் முயற்சியை கைவிட இந்திய கம்யூனிஸ்ட் வலியுறுத்தல்

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தமிழக முதல்வரால் அறிவிக்கப்பட்டுள்ள வறட்சி நிவாரணத்தொகையை பழைய கடனுக்கு வரவு வைக்கும் முயற்சியை மாவட்ட நிர்வாகம் தடுக்க வேண்டுமென இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து அக்கட்சியின் மாவட்டச்செயலர் த. செங்கோடன் வெளியிட்ட அறிக்கை: தமிழகத்தில் சென்னை மாவட்டம் தவிர்த்த அனைத்து மாவட்டங்களையும் வறட்சி பாதித்த மாவட்டமாக முதல்வர் ஜெயலலிதா அறிவித்ததுடன், பாதிகப்பட்டு வாடும் விவசாயிகளுக்கு உடனடியாக நிவாரண உதவிகள் கிடைக்கும் வகையில் துரித நடவடிக்கை மேற்கொண்டதற்கு கட்சி சார்பில் பாராட்டுதல்களை தெரிவிக்கிறோம்.

முதல்வரின் அறிவிப்பை விரைந்து நிறைவேற்றும் வகையில் மாவட்ட நிர்வாகம் எடுத்து வரும் நடவடிக்கைகளால் விவசாயிகள் குறைந்தபட்ச நிவாரணத்தை பெற்று வருகின்றனர். இந்நிலையில், மாவட்டத்தில் சில இடங்களில் குறிப்பாக அறந்தாங்கி வட்டத்திலுள்ள ஒரு சில கூட்டுறவு வங்கிகள் விவசாயிகளுக்கு அளிக்க வேண்டிய நிவாரணத் தொகையை அவர்கள் வாங்கி0யுள்ள பழைய கடன் பாக்கியில் வரவு வைக்கும் முயற்சிகளை நடப்பதாக தகவல் கிடைத்துள்ளது. மேலும், இந்த முயற்சிக்கு ஒத்துழைக்காத விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு கிடையாது என மிரட்டப்படுவதும் நடந்துள்ளது.

ஆனால், தமிழக முதல்வரின் மனிதாபிமானத்துடன் கூடிய சீரிய எண்ணங்களுக்கு களங்கம் உண்டாக்கும் வகையில் வங்கிகளின் இது போன்ற தன்னிச்சையான நடவடிக்கைகள் அமைந்துவிடும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம். நிவாரணம் பெறும் விவசாயிகளுக்கு இந்தநிலை என்றால், ஆலங்குடி வட்டம், கொத்தமங்கலம், கீரமங்கலம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பெரும்பாலான விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் கிடைக்காத நிலையால் அனைவரும் வேதனைப்படும் நிலை உள்ளது. எனவே மாவட்ட ஆட்சியர் இப்பிரச்னையில் தலையிட்டு உரிய விசாரணை நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## வெற்றிலை விலை உயர்வு: விவசாயிகள் மகிழ்ச்சி

பரமத்திவேலூர் வெற்றிலை ஏலச் சந்தையில் வெற்றிலை விலை உயர்ந்துள்ளதால், வெற்றிலை பயிர் செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

பரமத்திவேலூர் வட்டத்தில் காவிரி கரையோரப் பகுதிகளான பாண்டமங்கலம், பொத்தனூர், வேலூர், அனிச்சம்பாளையம், குப்புச்சிபாளையம், பாலப்பட்டி, குன்னிப்பாளையம், மோகனூர் உள்ளிட்ட பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் வெற்றிலை சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

இங்கு விளையும் வெற்றிலைகள் பரமத்திவேலூரில் நடைபெறும் வெற்றிலை ஏலச் சந்தைக்கு கொண்டு வரப்பட்டு ஏலம் விடப்படுகிறது. கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் வெள்ளைக் கொடி வெற்றிலை சுமை (104 கவுளிகள் கொண்டது) ஒன்று ரூ.4 ஆயிரத்து 500-க்கும், கற்பூரி வெற்றிலை சுமை ஒன்று ரூ.2 ஆயிரத்து 500-க்கும் ஏலம் போனது. ஆனால், புதன்கிழமை நடைபெற்ற ஏலத்தில் வெள்ளைக் கொடி வெற்றிலை சுமை ஒன்று

ரூ.6 ஆயிரத்திற்கும், கற்பூரி வெற்றிலை சுமை ஒன்று ரூ.3 ஆயிரத்து 500-க்கும் ஏலம் போனது. வறட்சி காரணமாகவும், உற்பத்தி குறைந்ததாலும் வெற்றிலை விலை உயர்ந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

## புதிய கட்டடங்களில் "மழைநீர் சேகரிப்பு' இல்லை

புதிதாகக் கட்டப்படும் கட்டடங்களில் மழைநீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்தப்படுவதில்லை என வேலூர் மாமன்றத்தின் சாதாரணக் கூட்டத்தில் உறுப்பினர்கள் புகார் தெரிவித்தனர்.

இக்கூட்டம் மாநகராட்சி அலுவலகத்தில் மேயர் பா. கார்த்தியாயினி தலைமையில் வியாழக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்தில் உறுப்பினர்கள் பேசியது:

ராஜா: கட்டடம் கட்ட உரிய அனுமதி பெறப்பட்டு புதிதாக கட்டப்படும் கட்டடங்களில் மழைநீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்துவதேயில்லை. இதுகுறித்து மாநகராட்சி அதிகாரிகள் ஆய்வு செய்து அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் தெரு நாய்களின் தொல்லை அதிகமாக உள்ளது. அதனை கட்டுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சண்முகம்: மோட்டார் பயன்படுத்தி தண்ணீர் எடுப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரியிருந்தேன். ஆனால் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

சீனிவாசகாந்தி: வேலூரில் மாநகராட்சி சார்பில் நீச்சல்குளம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

துணை மேயர் வி.டி. தர்மலிங்கம்: வேலூர் மாநகருக்கு அன்றாடம் வந்து செல்வோருக்கு குடிநீர் வசதி செய்துதர வேண்டும். 3-வது மண்டலம் சர்பனாமேடில் ரூ.35 லட்சத்தில் கட்டப்பட்டுள்ள தரைமட்ட நீர்த்தேக்கத்தொட்டியை பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும். மாநகராட்சிப் பள்ளிகளில் ஆங்கில வழிக்கல்வியை தொடங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

சுகுமார், முருகன் : அல்லாபுரத்தில் உள்ள குடிநீர்த் தொட்டியிலிருந்து தொரப்பாடிக்கு விநியோகம் செய்யப்படவேண்டிய குடிநீர் சரிவர வருவதேயில்லை. அல்லாபுரம் பகுதிக்கு மட்டும் குடிநீர் வழங்கப்படுகிறது. எங்கள் பகுதிக்கு குடிநீர் வந்து 3 மாதம் ஆகிறது. இதனால் 49, 50-வது வார்டு பகுதிகள் பாதிக்கப்படுகின்றன. இதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கவில்லையெனில் நாங்களே எங்கள் பகுதிக்கு தண்ணீரை திருப்பிவிட்டுக் கொள்வோம்.

முஹம்மத் அனீப்: எங்கள் வார்டில் தண்ணீர் பிரச்னை தலைவிரித்தாடுகிறது. அதனால் ஏற்கெனவே பழுதாகி உள்ள ஆழ்துளை கிணறுகளை சீரமைக்க வேண்டும்.

கூட்டத்தில் உறுப்பினர்கள் தெரிவித்த புகார்கள் தொடர்பாக, விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என மேயர் பா.கார்த்தியாயினி உறுதியளித்தார்.

ஆணையர் ஜானகி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## நீலகிரியில் தொடங்குகிறது தென்மேற்கு பருவமழை!

நீலகிரி மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் பரவலாக பெய்துவரும் மழை, மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழையின் தொடக்கமாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கோடை வெயிலும், அக்னி வெயிலும் சுட்டெரித்தபோது, மலை மாவட்டமான நீலகிரியும் அதற்கு தப்பவில்லை.

மாவட்டத்தில் கடந்த பல ஆண்டுகளில் இல்லாத வகையில் நடப்பாண்டில் மே மாதத்தில் கடும் வெப்பம் நிலவியது.

இதனால், உதகைக்கு வந்த வெளி மாநில சுற்றுலாப் பயணிகள் உதகையிலும் ஏ.சி., மின் விசிறி வசதிகள் கொண்ட அறைகளில் தங்கினர். நடப்பாண்டில் குறித்த காலத்துக்கு முன்னரே, அதாவது மே கடைசி வாரத்தில் தென்மேற்கு பருவமழை தொடங்குமென வானிலை ஆய்வு மையம் அறிவித்திருந்தது.

அதற்கேற்ப உதகை உள்ளிட்ட மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் வியாழக்கிழமை பலத்த மழை பெய்தது. இதனால், தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கி, வெள்ளம் போல பெருக்கெடுத்து ஓடியது. உதகையில் சேரிங்கிராஸ், கமர்சியல் சாலை, மார்க்கெட், மத்தியப் பேருந்து நிலையம், ரயில் நிலையம், சிறுவர் பூங்கா, படகு இல்லம் உள்ளிட்ட தாழ்வான பகுதிகளில் சாலையிலேயே குளம்போல மழைநீர் தேங்கியது. இதனால் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது.

பலத்த மழை காரணமாக 3 மணி நேரம் படகு சவாரி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இருப்பினும் சுற்றுலா மையங்களில் சுற்றுலாப் பயணிகளின் கூட்டம் அதிகமாக காணப்பட்டது.

உதகையில் பகல் 1 மணிக்கு தொடங்கிய மழை மாலை 4 வரை நீடித்தது.

அதைத்தொடர்ந்து இரவிலும் லேசான பெய்து கொண்டிருந்தது.

இந்த மழை தென்மேற்கு பருவமழையின் தொடக்கமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இதற்காக பேரிடர் மேலாண்மைக் குழு சார்பில் பருவமழைக் காலங்களில் ஏற்படும் இன்னல்களின்போது மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது.

### பவானிசாகர் அணை நீர்மட்டம் 30.17 அடி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரப்படி 30.17 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 44 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 225 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 1.1.18 டி.எம்.சி.

### வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம்

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இதுவரை 1,391 கோடி நிவாரண உதவி வழங்கப்பட்டுள்ளது என்று, வருவாய்த் துறை அமைச்சர் தோப்பு என்.டி.வெங்கடாசலம் கூறினார்.

ஈரோடு மாவட்டம், அந்தியூர் தொகுதிக்கு உள்பட்ட கணக்கம்பாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா வியாழக்கிழமை நடைபெற்றது.

இதில் 2,377 பயனாளிகளுக்கு ரூ.4.25 கோடி மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் வழங்கினார்.

பின்னர் அவர் பேசியது:

தேர்தல் காலத்தில் அளித்த வாக்குறுதிகள் அனைத்தையும் முதல்வர் ஜெயலலிதா நிறைவேற்றியுள்ளார். அரசின் கஜானாவை திமுகவினர் காலியாக விட்டுச் சென்றிருந்த நிலையில், முதல்வர் ஜெயலலிதா மதிநுட்பத்தோடு செயல்பட்டு சிறந்த நிர்வாகத்திறமையுடன் நிதி நிலையைப் பெருக்கி பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

சென்னை மாநகராட்சிப் பகுதியில் மலிவு விலை அம்மா உணவகங்கள் திறக்கப்பட்டு, இட்லி ரூ.1, சாம்பார் சாதம் ரூ.5, தயிர் சாதம் ரூ.3-க்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் அனைத்து மாநகராட்சிப் பகுதிகளிலும் செயல்படுத்தப்படவுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலமாக மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தி தரப்பட்டுள்ளது. சத்துணவில் 13 வகையான உணவுகள் வழங்கப்படுகிறது. கோவில்களில் அன்னதான திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வட கிழக்கு மற்றும் தென்மேற்கு பருவ மழை பொய்த்துவிட்டதாலும், காவிரி நீரில் தமிழகத்தின் பங்கை கர்நாடகம் தர மறுத்ததாலும் தமிழகத்தில் கடும் வறட்சி ஏற்பட்டது. இதனால், டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு ரூ.541 கோடி வறட்சி நிவாரண உதவித்தொகையும், பிற மாவட்ட விவசாயிகளுக்கு ரூ.850 கோடி அளவில் வறட்சி நிவாரண உதவித்தொகையும் வழங்கப்பட்டுள்ளது என்றார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் எஸ்.ஆர்.செல்வம், டி.என்.பாளையம் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் கே.ஆர்.கந்தசாமி, முன்னாள் எம்.பி.க்கள் சின்னசாமி, கே.கே.காளியப்பன் உள்பட பலர் பங்கேற்றனர்.

## விவசாயக் கடனை ரத்து செய்யக் கோரிக்கை

கடும் வறட்சி நிலவும் சூழலில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் பெறப்பட்ட விவசாயக் கடனை மத்திய அரசு ரத்து செய்ய வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கட்சி சார்பற்ற தமிழக விவசாயிகள் சங்கத்தின் சார்பில் தாராபுரத்தில் நாடாளுமன்ற தேர்தல் குறித்து விவசாயிகள் விழிப்புணர்வுக் கூட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது. சங்க திருப்பூர் மாவட்டத் தலைவர் ஏ.காளிமுத்து தலைமை வகித்தார். மாவட்ட கொள்கை பரப்புச் செயலாளர்

கி.ஆறுமுகம், என்.கதிர்வேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சங்கத்தின் மாநில பொருளாளர் என்.கே.டி.பொன்னுச்சாமி சிறப்புரை ஆற்றினார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் பணிபுரியும் தொழிலாளர்களை விவசாயத்துக்கு பயன்படுத்த அனுமதிக்க வேண்டும். விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்களை 90 சதவீதம் மானிய விலையில் மத்திய அரசு வழங்க வேண்டும்.

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் வழங்கப்பட்டுள்ள கல்விக் கடன்களுக்கு வட்டி வசூலிக்கக் கூடாது. அந்த வங்கிகளில் பெறப்பட்ட விவசாயக் கடனை ரத்து செய்ய வேண்டும்.

மத்திய மின் தொகுப்பிலிருந்து தமிழகத்துக்கு மின்சாரம் கொண்டுவர தனி மின்வழித் தடம் அமைத்துத் தர வேண்டும்.

நாடாளுமன்றத்தில் வேளாண்மைத் துறைக்கு தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். பாமாயில் இறக்குமதிக்கு மத்திய அரசு தடைவிதிப்பதுடன் வெங்காயத்தை தங்குதடையின்றி ஏற்றுமதி செய்ய வேண்டும்.

உழவர் தலைவர் நாராயணசாமி நாயுடுக்கு மணிமண்டபம் கட்டப்பட வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முன்னதாக தாராபுரம் அண்ணாசிலை முன் இருந்து புறப்பட்ட வாகனப் பேரணியில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

### விவசாயிகளுக்கு வெளி மாநில பட்டறிவுப் பயணம்

நீர்வள நிலவளத் திட்டத்தின் சார்பில் விருதுநகர் மாவட்ட விவசாயிகள் வெளிமாநிலத்துக்கு பட்டறிவுப் பயணமாக வேளாண்மைத் துறையினரால் அழைத்துச் செல்லப்பட்டனர்.

இது குறித்து உழவர் பயிற்சி நிலைய வேளாண்மைத் துணை இயக்குநர் சு. செண்பகராஜ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: பொதுப்பணித் துறை, வேளாண்மைத் துறை மற்றும் வேளாண் சார்ந்த அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து உலக வங்கி நிதியுதவியுடன் நீர்வள, நிலவளத் திட்டம் மும்முரமாக செயல்படுத்தப்படுகிறது.

இதன் அடிப்படையில் விருதுநகர் மாவட்டத்தில் 15 உப வடிநீர்ப் பகுதிகளில் நீர்வள நிலவளத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில், 9 உப வடிநீர்ப் பகுதிகளைச் சேர்ந்த 23 விவசாயிகளைத் தேர்வு செய்து வெளி மாநில பட்டறிவுப் பயணமாக ஆந்திர மாநிலம், ஹைதராபாத் நகருக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்குள்ள சோளம், நெல், எண்ணெய் வித்துக்கள் மற்றும் மானாவாரி பயிர்களுக்கான பன்னாட்டு ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றுக்கு நேரில் அழைத்துச் செல்லப்பட்டனர்.

அதேபோல், அங்கு விவசாயத்திற்காக அமைக்கப்பட்டுள்ள நீர் மேலாண்மை, பயிர் மேலாண்மை, பண்ணைக் குட்டைகள் அமைப்பதன் அவசியம் குறித்து நேரில் பார்த்து, விளக்கங்களையும் கேட்டறிந்தனர். பின்னர் அங்கு நவீன வேளாண்மையில் இயந்திரங்களின் பயன்பாடு, பயிர் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்தும் அங்குள்ள முன்னோடி விவசாயிகள் விரிவாகவும், விளக்கமாகவும் கருத்துக்களை எடுத்துரைத்தனர்.

இதில் விவசாயிகள் வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனங்களில் நடந்து வரும் ஆராய்ச்சிகள் மற்றும் செயல் விளங்ககங்களை நேரில் பார்வையிட்டு அறிந்து கொண்டதோடு, நவீன விவசாயம் செய்யும் தொழில்நுட்பங்களை பயிர் சாகுபடியில் வருங்காலங்களில் பயன்படுத்துவது மிகவும் பயனுள்ளதாக இருக்குமென விவசாயிகள் கருத்து தெரிவித்தனர்.

## கரும்பு விவசாயிகளுக்கு பணம் பட்டுவாடா செய்யாததால் சர்க்கரை ஆலையை அரசு ஏற்று நடத்த எம்.எல்.ஏ. வலியுறுத்தல்

சிவகங்கை மாவட்டத்தில் ஆலைக்கு கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு சர்க்கரை ஆலை பணம் பட்டுவாடா செய்யாததால், ஆலையை அரசே ஏற்று நடத்த வேண்டும். நிதிநிலை குறித்து பகிரங்க அறிக்கையை மாவட்ட நிர்வாகத்திடம் ஆலை நிர்வாகம் வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி, வரும் ஜூன் 10ஆம் தேதி சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிடும் போராட்டத்தை நடத்துவது என கரும்பு விவசாயிகள் ஆலோசனைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் கரும்பு விவசாயிகள் சங்க ஆலோசனைக் கூட்டம் புதன்கிழமை மாலை நடைபெற்றது.

கூட்டத்திற்கு தலைமை வகித்து சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.குணசேகரன் பேசியதாவது:

சிவகங்கை மாவட்டத்தில் செயல்பட்டு வரும், தனியார் சர்க்கரை ஆலை நிர்வாகம் கரும்பு விவசாயிகளிடம் பிடித்தம் செய்த கடன் தொகையை வங்கிகளிடம் செலுத்தவில்லை. இதனால் கரும்பு விவசாயிகள் புதிய பயிர்க்கடன் பெற முடியவில்லை. அதேபோல் விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய பாக்கித் தொகையையும் ஆலை நிர்வாகம் வழங்கவில்லை.விவசாயிகளுக்கும், வங்கிக்கும் ஆலை நிர்வாகம் மொத்தம் ரூ.60கோடி வரை வழங்க வேண்டியுள்ளது. கரும்பு வெட்டும் போதே, விவசாயிகளுக்கு 85சதவீதம் பணம் பட்டுவாடா செய்ய வேண்டுமென நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஆனால் அந்த உத்தரவை ஆலை நிர்வாகம் நிறைவேற்றவில்லை.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியரிடம் பலமுறை முறையிட்டும் நடவடிக்கை இல்லை. தொடர்ந்து இதே நிலை நீடித்து வருவதால் வரும் ஜூன் 10ஆம் தேதி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்த வேண்டும் என்றார்.

கூட்டத்திற்கு ஒன்றியக்குழு தலைவர் பாஸ்கரன் அம்பலம் முன்னிலை வகித்தார். விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் கலையரசன், கரும்பு விவசாயிகள் சங்க துணைத் தலைவர் உடையப்பன், கூட்டுறவு சங்கத் தலைவர்கள் மகேந்திரன், மாயழகு, முனியாண்டி குமார், சசிக்குமார், முன்னாள் தலைவர் தமிழரசன், ஊராட்சி தலைவர் செல்வம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## வறட்சி நிவாரணத்தில் முறைகேடு: விவசாயிகள் கூட்டத்தில் ஆட்சியரிடம் புகார்

வறட்சி நிவாரண நிதி வழங்கப்பட்டதில் மாவட்டத்தின் பெரும்பாலான இடங்களில் முறைகேடு நடந்துள்ளதாக, குறைதீர் கூட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள் மாவட்ட ஆட்சியரிடம் புகார் அளித்தனர்.

திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு, மாவட்ட ஆட்சியர் ந. வெங்கடாசலம் தலைமை வகித்தார்.

கூட்டத்தில் பங்கேற்ற பெரும்பாலான விவசாயிகள் வறட்சி நிவாரணம் வழங்குவதில் முறைகேடுகள் நடந்துள்ளதாக, ஆட்சியரிடம் புகார் அளித்தனர். இது தொடர்பாக நடைபெற்ற விவாதம்:

மாவட்டம் முழுவதும் வறட்சி பாதித்த பகுதிகளை கணக்கெடுக்கும் பணியில் அந்தந்தப் பகுதியைச் சேர்ந்த கிராம நிர்வாக அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். ஆனால், அவர்கள் நேரடியாக பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் செல்லாமல், அலுவலகத்தில் இருந்துகொண்டே உள்ளாட்சிப் பணியாளர்கள் கொடுத்த தகவலின்பேரில் மதிப்பீடு செய்துள்ளனர்.

இதில், கோவிலூர், எரியோடு, புளியம்பட்டி, கொம்பேரிபட்டி உள்ளிட்ட பகுதிகளில் 1,600 விவசாயிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளோம். ஆனால், 560 பேருக்கு மட்டுமே நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. இதே பகுதியில் உள்ள மத்தனம்பட்டியில் ஒருவருக்கு மட்டும் முறைகேடாக ரூ. 72 ஆயிரம் வரை நிவாரண நிதி வழங்கி உள்ளனர்.

இது குறித்து, அதிகாரிகளிடம் கேட்டால் பதில் அளிக்காமல் சிரித்துவிட்டுச் செல்கின்றனர். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் கிடைக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவேண்டும், என அந்தப் பகுதியைச் சேர்ந்த விவசாயி வி. துரைக்கண்ணன் தெரிவித்தார்.

இதேபோல், திண்டுக்கல் வட்டத்தில் உள்ள கம்பிளியம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த 10-க்கும் மேற்பட்ட விவசாயிகள் வறட்சி பாதித்த பகுதிகளை மறுகணக்கெடுப்பு நடத்தி, வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் என கேட்டுக் கொண்டனர்.

இது பற்றி அந்த கிராமத்தைச் சேர்ந்த எம்.சி. நாட்ராயன் தெரிவித்தது:

கம்பிளியம்பட்டி பகுதியில் சுமார் 4 ஆயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட நிலங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. ஆனால், 266 பேருக்கு மட்டுமே வறட்சி நிவாரணம் வழங்கியுள்ளனர். நிவாரண நிதி கிடைக்காமல் சுமார் 2000-க்கும் மேற்பட்ட விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளோம். அனைத்து விவசாயிகளுக்கும் வறட்சி நிதி கிடைக்கும் வகையில் பாதிக்கப்பட்ட பகுதிகளை மறுஆய்வு நடத்த, மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனத் தெரிவித்தனர்.

இதற்கு பதில் அளித்து பேசுகையில், நிவாரண நிதி புகார் தொடர்பான பிரச்னைகளுக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் ஆட்சியர்.

காப்பீட்டுத் தொகை வழங்கப்படுமா?

சுமார் 500 ஏக்கர் அளவில் சாகுபடி செய்யப்பட்ட கரும்பு, வறட்சியின் காரணமாக முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது என, பழனி அடுத்துள்ள கோம்பைப்பட்டி விவசாயிகள் ஆட்சியரிடம் முறையிட்டனர். இது தொடர்பாக, அந்தப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் ஆர். சக்கையன், த. தங்கராசு, செல்லத்துரை உள்ளிட்டோர் கூட்டாகத் தெரிவித்தது:

பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், கரும்பு காப்பீடு செய்யப்பட்ட நிலையிலும், காப்பீட்டுத் தொகை இதுவரை கிடைக்கவில்லை. இந்நிலையில், கூட்டுறவு வங்கியில் விவசாயக் கடனாக பெற்ற தொகையை கட்டச் சொல்லி வங்கியாளர்கள் நெருக்கடி கொடுக்கின்றனர் என்றனர்.

இதற்கு பதிலளித்த ஆட்சியர், அன்னவாரிச் சான்றிதழ் வழங்கப்பட்டு, கடனை திருப்பிச் செலுத்துவதற்கு ஒர் ஆண்டு கால அவகாசம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் என்றார்.

கூட்டத்தில், வேளாண்மை இணை இயக்குநர் நா.த. சம்பத்குமார், நங்காஞ்சியார் செயற் பொறியாளர் செந்தில் வடிவேல், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கார்த்திகேயன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## "காய்கறி அதிகம் சாப்பிட்டால் புற்று நோய்த் தாக்கம் குறையும்'

நார்ச்சத்து மிகுந்த உணவுப் பொருள்கள், பழ வகைகள் மற்றும் காய்கறிகளை அதிகம் உட்கொண்டால் புற்று நோய் உள்ளிட்டவற்றின் தாக்கத்தைக் குறைக்கலாம் என மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனை மருத்துவர்கள் ஆலோசனை வழங்கினர்.

உலக புகையிலை தினமாக (மே 31) வெள்ளிக்கிழமை கடைப்பிடிக்கப்படுவதை முன்னிட்டு மீனாட்சி மிஷன் மருத்துவமனை புற்றுநோய் சிகிச்சை நிபுணர்கள் கே.எஸ். கிருஷ்ணகுமார், விஜயபாஸ்கர், மருத்துவமனையின் மருத்துவ இயக்குநர் ரமேஷ் அர்த்தநாரி, இந்திய மருத்துவர்கள் சங்க மீனாட்சி கிளைச் செயலர் எஸ். குமார் ஆகியோர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

முதல்வர் ஜெயலலிதா மாநிலத்தில் பான்பராக், குட்காவுக்குத் தடை விதித்திருப்பது பாராட்டுக்குரியது. அதேபோல மது, சிகரெட்டுக்கும் தடை விதிக்க வேண்டும். உலக அளவில் ஆண்டுதோறும் புற்று நோய்க்கு 1 கோடிப் பேர் பாதிக்கப்படுகின்றனர். நம் நாட்டில் லட்சத்தில் 115 பேருக்கு புற்று நோய் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

ரத்த அழுத்தம், சர்க்கரை நோயால் இறப்போரில் 65 சதம் பேர் புகையிலை பயன்படுத்தியிருப்பதும் தெரியவந்துள்ளது. வரும் 2020-ல் புகையிலை பயன்படுத்தி இறப்போர் எண்ணிக்கை 10 மில்லியனாகலாம். இதில் 35 முதல் 60 வயது வரை உள்ளவர்களும் அடங்குவர்.

தற்போது 15 வயதுக்குட்பட்ட 4 மில்லியன் சிறார்கள் புகையிலை பயன்படுத்துகின்றனர். புகையிலை தொழிற்சாலையில் பணிபுரிவோருக்கு கிரீன்டோபாக்கோ நோய் பாதிக்கிறது.

புகையிலையால் 30 சதம் பேருக்கும், பி மற்றும் சி மற்றும் எச்.பி.வி. வைரஸால் 20 சதம் பேருக்கும் புற்றுநோய் வருகிறது. மது அருந்துவது, பான்பராக் உள்ளிட்டவற்றை பயன்படுத்துவதால் புற்று நோய் தாக்குதல் அதிகமாகிறது. நார்ச்சத்து உணவுப் பொருள்கள், பழ வகைகள், காய்கறிகள் போன்றவற்றை அதிகம் சாப்பிட்டால் நோய் தாக்கத்தை குறைக்கலாம்.

நல்ல உணவு, காற்று, உடற்பயிற்சி, நல்ல ஓய்வு, போதுமான சூரிய ஒளி, இயற்கையான தூக்கம், ஹார்மோன் மருந்துகளைத் தவிர்த்தல் ஆகியவை அவசியம். நாட்டில் தற்போது 300 புற்று நோய் சிகிச்சை மையங்களும், 225 கதிரியக்கச் சிகிச்சை மையங்களும் உள்ளன.

புற்று நோய் தாக்கத்தில் இருந்து காக்கும் வகையில் பள்ளிகளிலிருந்து விழிப்புணர்வு பாடம் அறிமுகப்படுத்த வேண்டும். புற்று நோய் கண்டறியும் முகாம்களை அரசு நடத்துவதுடன் சமூக சேவை நிறுவனங்களும் முகாம் நடத்துவது அவசியம் என மருத்துவர்கள் கூறினர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**31.05.2013 A.M**

---

## 30 ஆயிரம் டன் வரை வேளாண் விளைபொருள்களை சேமிப்பு கிடங்கு அமைக்க மானியத்துடன் கடன் விவசாயிகளுக்கு அழைப்பு

திருநெல்வேலி:30 ஆயிரம் டன் வரை வேளாண் விளைபொருட்ளை சேமிக்க கிடங்கு அமைக்க மானியத்துடன் கடன் வழங்கப்படுகிறது.

நெல்லை மாவட்ட அளவிலான பாங்க் அதிகாரிகளின் பணி ஆய்வு கூட்டம் நெல்லையில் நடந்தது. இதில் தலைமை வகித்து கலெக்டர் சமயமூர்த்தி தெரிவித்ததாவது:

பள்ளி, கல்லூரிகளில் ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவி தொகைகள் பாங்கள் மூலம் வழங்க அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மகளிர் சுய உதவி குழுக்களுக்கு சுழல் நிதி, பொருளாதார கடன், மொத்த கடன் நிலுவைகளை விரைவாக வழங்க வேண்டும். பாங்க் கணக்கு தொடங்கப்படாமல் உள்ள தேசிய ஊரக வேலைவாய்ப்பு ஊரக திட்ட பணியாளர்களுக்கு பாங்க் கணக்குகளை தொடங்க வேண்டும்.

பாரத பிரதமர் சுய வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் மானியத்தடன் தொழில் தொடங்க நடப்பாண்டிற்கு 35 பயனாளிகள் தேர்வு செய்யப்படுகின்றனர். இளைஞர்கள் சுய வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் தொழில் தொடங்க 165 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு 55.95 லட்சம் மானியம் வழங்க ஒதுக்கீடு செய்யப்பட்டு இதுவரை 147 பயனாளிகளுக்கு 51.46 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. கோழி வளர்ப்புக்காக மானியத்துடன் கடன் வழங்க பயனாளிகளை தேர்வு செய்யும் பணி நடந்து வருகிறது.

நபார்டு பாங்க் மூலம் கிராமப் பகுதிகளில் வேளாண் விளைபொருட்கள் சேமிப்பு கிடங்கு அமைக்கும் திட்டத்தின் கீழ் 100 மெ.டன் முதல் 30 ஆயிரம் மெ.டன் வரை பொருட்களை சேமிக்க கிடங்கு அமைக்க பாங்க் கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தை மகளிர் சுய உதவி குழுக்கள், வேளாண் விவசாயிகள், கூட்டுறவு நிறுவனங்கள், கிராம மக்கள் அனைத்து தரப்பினரும் பயன்படுத்தி கொள்ள வேண்டும்.

இவ்வாறு கலெக்டர் தெரிவித்தார்.

இதில் ரிசர்வ் பாங்க் உதவி பொது மேலாளர் சுந்தரேசன், இந்தியன் ஓவர்சீஸ் பாங்க் முதுநிலை மண்டல மேலாளர் சீனிவாசன், நபார்டு பாங்க் உதவி பொது மேலாளர் ராமலிங்கம், முன்னோடி பாங்க் அலுவலர் அழகர்சாமி, பி.ஆர்.ஓ மாரியப்பன், தொழில் மைய பொது மேலாளர் ராஜராஜன், தாட்கோ மேலாளர் செல்வராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## சிறிய வெங்காயம் விலை கடும் உயர்வு ஏழை மற்றும் நடுத்தர மக்கள் பாதிப்பு

மார்த்தாண்டம்:தமிழகத்தில் சிறிய வெங்காயத்தின் விலை வரலாறு காணாத அளவில் கிடு கிடுவென உயர்ந்துள்ளது.

வெங்காயம், குமரி மாவட்டத்தில் "உள்ளி' என அழைக்கப்படுகிறது. இந்த வெங்காயம், சிறிய வெங்காயம், பெரிய வெங்காயம் என இருவகையாக உள்ளன. பெரிய வெங்காயத்தை "பல்லாரி' என்றும் கூறுவர். பொதுவாக, ஓட்டல் உட்பட விருந்து நிகழ்ச்சிகளுக்கு பெரிய வெங்காயத்தின் பயன்பாடு அதிகமாகக் காணப்படும். ஆனால், வீடுகளில் சிறிய வெங்காயத்தின் பயன்பாடு அதிகமாக உள்ளது.

பொதுவாக, சிறிய வெங்காயத்தை விட, பெரிய வெங்காயம் விலை அதிகமாக இருக்கும். மேலும், அடிக்கடி பெரிய வெங்காயத்தின் விலை கிடு கிடுவென உயர்ந்து விடுவதும் உண்டு. சிறிய வெங்காயம், தற்போது சீனாவிலிருந்தும் இறக்குமதி செய்யப்படுகிறது. இதனை "சீனா உள்ளி' என்றும் கூறுவர். ஆனாலும், இந்தியாவில் பயிராகும் சிறிய வெங்காயத்திற்கு மவுசு அதிகம் உள்ளது.

சிறிய வெங்காயம், தற்போது வரலாறு காணாத வகையில் விலை உயர்ந்துள்ளது. தற்போது கிலோ 80 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஆனால், பெரிய வெங்காயம் கிலோ 20 ரூபாய்க்கு கிடைக்கிறது. சென்ற ஆண்டு இதே நேரத்தில் சிறிய வெங்காயம் 30 முதல் 40 ரூபாய் வரை மட்டுமே விற்று வந்தது.

தமிழகத்தில் நிலவி வந்த வறட்சியின் காரணமாகவும், போதிய மழைப்பொழிவு இல்லாததும், சிறிய வெங்காயம் விலை அதிகரிக்க காரணம் என வியாபாரிகள் தரப்பில் கூறப்படுகிறது. சிறிய வெங்காயத்தின் விலை உயர்வு, வெங்காயத்தின் தோலை உரிக்காமலேயே, இல்லத்தரசிகளின் கண்களில் நீரை வரவழைத்துள்ளது.

## வறட்சி நிவாரண நிதி பெறாத விவசாயிகள் மனு அளிக்குமாறு கலெக்டர் ஆலோசனை

திண்டுக்கல்:வறட்சி நிவாரண நிதி பெறாத விவசாயிகள் தங்கள் சங்கத்தின் மூலம் பெயர், விபரங்களை தெரிவித்து மனுவாக எழுதி கொடுத்தால் அவர்களுக்கான நிதி அளிப்பது குறித்து விரைவில் பரிசீலிக்கப்படும் என்று கலெக்டர் வெங்கடாசலம் பேசினார்.திண்டுக்கல்லில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடந்தது.பங்கேற்ற விவசாயிகள், தங்களுக்கு வறட்சி நிவாரண நிதி வழங்கப்படவில்லை என்றனர். பெரும்பாலான விவசாயிகள் இருக்கையிலிருந்து எழுந்து நின்று வறட்சி நிவாரண நிதி குறித்து ஆவேசமாக பேசினர். பெருமாள்சாமி: வறட்சியால் மாவட்டத்தில் ஒட்டுமொத்த விவசாயிகளும் பாதிக்கப்பட்டுள்ளோம். வேளாண்மை துறையினர் இதுபோன்ற நேரங்களில் துரிதமாக செயல்பட்டு விவசாயிகளின் துயர் துடைப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். ஆனால், வேளாண்மை துறை அலுவலர்கள் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரில் வந்து ஆய்வு செய்யவில்லை. விவசாயிகள் அல்லாதவர்களுக்கும், சாகுபடி செய்யாதவர்களுக்கும் நிவாரணம் வழங்கியுள்ளனர். வறட்சி குறித்து அவர்கள் நடத்திய ஆய்வு அறிக்கையின் நகலை விவசாயிகள் சங்கத்திற்கு தர வேண்டும்.வீரப்பன் : நிவாரண நிதி பெறுவதிலிருந்து கரும்பு விவசாயிகள் ஒட்டுமொத்தமாக புறக்கணிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான பயிர் காப்பீடு திட்ட நிதியும் வழங்கவில்லை. அதிகாரிகளிடம் கேட்டால் மழுப்பலான பதில்களையே கூறுகின்றனர். கரும்பு சாகுபடி செய்த விவசாயிகள் அனைவரும் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்து நிற்கின்றனர்.சக்கையன் : கோம்பைபட்டியில் 300 க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் மலையடிவாரத்தில் ஆயிரம் ஏக்கரில் கரும்பு பயிர் செய்துள்ளோம். அடிக்கடி யானைகள் வந்து இவற்றை அழித்து விடுகின்றன. வனத்துறையால் அமைக்கப்பட்ட அகழிகள் பயன்பாடில்லாமல் உள்ளது. யானை மிதித்ததால் எனது தம்பி இறந்து விட்டான். ஒவ்வொரு குடும்பமும் அச்சத்துடன் வாழ்ந்து வருகிறோம். வனத்துறையினரிடம் வேண்டுகோள் விடுத்தால் 6 மணிக்கு மேல் தோட்டம் பக்கம் செல்லாதீர்கள் என்கின்றனர். தோட்டவேலை செய்யாமல் எங்களால் எப்படி இருக்க முடியும். கலெக்டர் வெங்கடாசலம்: தோட்டங்களின் பக்கம் வரக்கூடாது என்றால் யானைகள் கேட்காது. அவைகளிடம் சொல்வது வீண் என்பதால் வனத்துறையினர் விவசாயிகளிடம், நீங்களாவது நாங்கள் சொல்வதை கேளுங்கள் என்று கூறியிருப்பர். நிவாரணம் கிடைக்காத விவசாயிகள் அனைவருக்கும் பாரபட்சம் இல்லாமல் நிதி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பயிர்

காப்பீடு திட்டத்தின் கீழ் விரைவாக நிதி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.இவ்வாறு கூட்டத்தில் விவாதம் நடந்தது.

## கொடைக்கானலில் தொடரும் மழை

கொடைக்கானல்:கொடைக்கானலில் நேற்று 3வது நாளாக மழை தொடர்ந்தது. மதியம் 1.20 முதல் 3 மணி வரை மழை நீடித்தது. இம்மழை கொடைக்கானல் போட் கிளப்பில், 15 மி.மீ., ஆக பதிவாகி இருந்தது. இம்மழை காரணமாக, கொடைக்கானல் நீர்த்தேக்கங்களில் நீர்வரத்து அதிகரிக்க துவங்கியுள்ளது. மலைத்தோட்ட காய்கறிகளை பயிரிட மழை உதவும் என விவசாயிகள் நம்பிக்கையுடன் உள்ளனர்.

## கோடை வறட்சியிலும் ஆவின் பால் உற்பத்தி அதிகரிப்பு ஆஹா பாலை நீண்டநாள் பாதுகாக்க 4 குளிரூட்டும் "பிளான்ட்'கள்

ராமநாதபுரம்:கோடை வறட்சியிலும் இந்த மாதத்தில், ஆவின் பால் உற்பத்தி, 2,000 லிட்டர் வரை அதிகரித்துள்ளது. களப்பணியாளர்கள் பற்றாக்குறையால், விவசாயிகளிடையே பால் குறித்த விழிப்புணர்வில் தொய்வு ஏற்பட்டுள்ளது. நீண்ட நாள் பாலை பாதுகாக்க, நான்கு, பால் குளிரூட்டும் "பிளான்ட்'கள் அமைக்கப்பட்டு வருகிறது.காரைக்குடி ஆவின் பாலகம் மூலம் ராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களில், தினமும் 30 ஆயிரம் லிட்டர் பால் விற்கப்படுகிறது. ஆண்டுதோறும், கோடையில் பால் உற்பத்தி குறைவதும், பின் உயர்வதும் வழக்கம். கடந்தாண்டு 50 ஆயிரம் லிட்டர் என, உற்பத்தியில் சாதித்தது.இந்த ஆண்டு ஜனவரி முதல் பால் உற்பத்தியில் சரிவு துவங்கியது. தற்போது, கோடையின் பிடியில் கால்நடைகளுக்கு போதிய தீவனம் கிடைக்காததால் பால் உற்பத்தி மேலும் சரிந்தது. ஏப்ரல் மாதம் 43 ஆயிரம் லிட்டர் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டது. களப்பணியாளர்கள் பற்றாக்குறை: சில ஆண்டுகளுக்கு முன், இரு மாவட்டங்களிலும், பால் உற்பத்தியை பெருக்கும் வகையில், 13 களப்பணியாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். காலப்போக்கில் பலர் பணி ஓய்வு பெற்றனர். இவர்களுக்கு பதிலாக, யாரும் நியமிக்கப்படவில்லை. தற்போது, ஒருவர் மட்டுமே இரு மாவட்டங்களையும் கவனித்து வருகிறார். இதனால், பாலின் தரம், பணப்பட்டுவாடா, தீவனம் ஊக்குவிப்பு, கறவை மாடு கடன் உள்ளிட்டவற்றில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. கிறிஸ்டோபர்(ஆவின் பொது மேலாளர்) கூறியதாவது: கோடையில் பால் உற்பத்தி குறைவது வாடிக்கை. இருப்பினும், கால்நடைகளுக்கு தேவையான தீவனம் (வைக்கோல்) ராமநாதபுரம், சிவகங்கை, காரைக்குடியில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. ஏப்ரலில் 43 ஆயிரம், இம்மாதம் 45 ஆயிரம் லிட்டர் பால் உற்பத்தி கணிசமாக உயர்ந்துள்ளது.

தேவை போக, மீதமுள்ள 10 ஆயிரம் லிட்டர் பால், மதுரை, சென்னை மற்றும் கேரளாவிற்கு அனுப்பப்படுகிறது. தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஒரு கோடி ரூபாயில் நான்கு, பால் குளிரூட்டும் "பிளான்ட்'கள் அமைக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் பாலை நீண்ட நாள் கெடாமல் வைத்திருக்க முடியும். பணியாளர்கள் பற்றாக்குறை இருந்தாலும், பால் உற்பத்தியில் அதிக அக்கறை செலுத்தி வருகிறோம், என்றார்.

### விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம்

காரியாபட்டி:மல்லாங்கிணரில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில், விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. கூட்டுறவு வங்கித் தலைவர் பால்ச்சாமி தலைமை வகித்தார். கல்குறிச்சி கூட்டுறவு வங்கித் தலைவர் முருகன், வங்கி செயலாளர் செல்லகுரு முன்னிலை வகித்தனர். ஒன்றிய துணைதலைவர் ராமமூர்த்தி வறட்சி நிவாரணத் தொகையை வழங்கினார். அப்போது அவர் ,""மல்லாங்கிணர் கூட்டுறவு வங்கி மூலம் ஒரு கோடியே 53 லட்சம் நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது. கணக்கெடுப்பு பணியின் போது, சில விவசாயிகளின் பெயர்கள் விடுபட்டுள்ளதாக புகார்கள் வந்தன. விரைவில் அவர்களுக்கும் ,வறட்சி நிவாரணத் தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது," என்றார். கிளை செயலாளர்கள் பாண்டிமுத்து, ராமநாதன், வங்கி நிர்வாகக்குழு உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### தோட்டக்கலை துறையில் தரமற்ற விதைகள் குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் புகார்

கிருஷ்ணகிரி: "கிருஷ்ணகிரி மாவட்ட தோட்டக்கலை துறை சார்பில் தரமில்லாத விதைகள் வழங்கப்படுவதாக' குறை தீர் கூட்டத்தில் விவசாயிகள் புகார் செய்தனர்.

கிருஷ்ணகிரியில், டி.ஆர்.ஓ., பிரகாசம் தலைமையில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடந்தது. வேளாண் இணை இயக்குனர் குணசேகரன், வேளாண் அலுவலர் (தரக்கட்டுப்பாடு) பச்சையப்பன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்) சுமதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் நடந்த விவாதம் வருமாறு:

தர்மன்: விவசாய தேவைக்காக ஏரிகளில் இருந்து வண்டல் மண் எடுக்க மாவட்ட நிர்வாகம் அனுமதி வழங்க வேண்டும். செங்கல் சூளைக்கு ஏரிகளில் இருந்து அதிக அளவு மண் கடத்தப்படுகிறது. ஆனால், விவசாயிகள் மண் எடுக்க வருவாய் துறை மற்றும் கனிம வளத்துறை அனுமதி வழங்குவதில்லை.

டி.ஆர்.ஓ., பிரகாசம்: விவசாய தேவைக்காக ஏரிகளில் வண்டல் மண் எடுக்கும் விவசாயிகள் பட்டா மற்றும் சிட்டா நகலுடன் கனிம வளத்துறைக்கு விண்ணப்பித்து, அனுமதி பெறலாம். அனுமதி வாங்கிய விவசாயிகள் ஏரிக்கரையில் இருந்து குறிப்பிட்ட தூரம் விட்டு மண் எடுத்துக்கொள்ளலாம்.

ராமகவுண்டர் மற்றும் லோகாபிராம்: தென்பெண்ணை ஆறு, பாலாறு இணைப்பு திட்டத்துக்கு கால்வாய் வெட்ட நிலம் கையகப்படுத்தும் போது, நிலத்தின் உரிமையாளருக்கு முன்கூட்டியே தகவல் தெரிக்க வேண்டும்.

கால்வாய் வெட்ட நிலம் கொடுக்கும் விவசாயிகளுக்கு சந்தை மதிப்பீட்டை வைத்து இழப்பீட்டு தொகை வழங்க வேண்டும்.

பிரகாசம்: தென்பெண்ணை ஆறு - பாலாறு இணைப்பு திட்டத்துக்கு, "நேஷனல் வாட்டர் டெவலப்மெண்ட் ஏஜன்சி' நிலத்தை சர்வே செய்து வருகிறார்கள். நிலம் சர்வே முடிந்த பின் இழப்பீட்டு தொகை வழங்குவது குறித்து விவசாயிகளின் கருத்து அரசுக்கு பரிந்துரை செய்யப்படும்.

வெங்கடசாமி: கிருஷ்ணகிரி மாவட்ட தோட்டக்கலை துறையின் சார்பில் வழங்கப்படும் வெண்டை, கத்திரி, தக்காளி போன்ற விதைகள் தரமானதாக இல்லை. இதனால், பல விவசாயிகளின் நிலத்தில் நட்ட செடிகள் காய்கள் வரும் போது அழுகி விடுகிறது. தரமான விதைகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பிரகாசம்: பாதிக்கப்பட்ட விவசாயிகள் எந்த கம்பெனி விதைகளை பயன்படுத்தினார்கள் என தெரிவித்தால், அந்த கம்பெனி நிர்வாகத்திடம் பேசி அவர்களுக்கு உரிய இழப்பீட்டு தொகை கிடைக்க ஏற்பாடு செய்யப்படும். மேலும் தரமான விதைகளை மட்டுமே விவசாயிகள் வழங்க வேண்டும் என்று தோட்டக்கலை துறைக்கு உத்தரவிடப்படும்.

கிருஷ்ணன்: கிருஷ்ணகிரி மாவட்டம் வறட்சி மாவட்டமாக அறிவித்து, விவசாயிகளுக்கு இழப்பீடு தொகை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. ஆனால், மாவட்டத்தில் பல இடங்களில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீட்டு தொகை வழங்கவில்லை.

பிரகாசம்: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வறட்சி குறித்து தள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு பாதிக்கப்பட்ட, 7,692 விவசாயிகளுக்கு, ஒரு கோடியே, 73 லட்சத்து, 26 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு விவாதம் நடந்தது.

## வறட்சியால் வெற்றிலை சாகுபடி வீழ்ச்சி: கவுளி விலை ரூ.35 ஆக உயர்வு

ஈரோடு: வறட்சியால் வெற்றிலை சாகுபடி வீழ்ச்சியடைந்து, ஒரு கவுளி, 35 ரூபாயாக உயர்ந்துள்ளது.

ஈரோடு மாவட்டத்துக்கு, நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர், தர்மபுரி மாவட்டம் பென்னாகரம், பாலக்கோடு, கர்நாடக மாநிலம் மைசூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து அதிகளவில் வெற்றிலை இறக்குமதி ஆகிறது.

கறுப்பு வெற்றிலை, பீடா வெற்றிலை என தரம் பிரித்து மார்க்கெட்டில் விற்பனை செய்யப்படுகிறது. ஒரு கவுளி விலை, கடந்த வாரம் வரை, 25 ரூபாயில் இருந்து, 30 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது.

மழையின்மையால், வெற்றிலை சாகுபடி அளவு குறைந்து, விலை ஏற்றம் அதிகரித்துள்ளது.

ஒரு கவுளியில், ஐம்பது வெற்றிலை இருக்கும். வறட்சியால், வெற்றிலையின் அளவும் குறைந்து, சிறிய வடிவிலான வெற்றிலையே மார்க்கெட்டுக்கு வருகிறது.

தர்மபுரி பகுதி வெற்றிலை பெரியதாக இருந்தாலும், உற்பத்தி குறைவால், ஒரு கவுளி வெற்றிலையின் விலை, 35ல் இருந்து, 40 ரூபாய் வரை விற்கப்படுகிறது.

இதுகுறித்து வெற்றிலை வியாபாரி கலாவதி கூறியாதவது:

ஈரோட்டுக்கு வெளி மாவட்டம், மாநிலங்களில் இருந்து வெற்றிலை சப்ளை செய்யப்படுகிறது. வறட்சியால், வரத்து குறைந்து விலையும் அதிகரித்துள்ளது. வெற்றிலையின் பரப்பளவும் குறைந்துள்ளது. அடுத்தப் பருவம் வரும் வரை, வெற்றிலையின் விலை ஏற்றத்திலேயே இருக்கும், என்றார்.

## பசுந்தேயிலை மகசூல் அதிகம் தொழிற்சாலைகளில் வரத்து அதிகம்

மஞ்சூர்:மஞ்சூர் பகுதிகளில் பெய்யும் பரவலான மழையால் பசுந்தேயிலை மகசூல் அதிகரித்து, தொழிற்சாலைகளில் பசுந்தேயிலை குவிந்து வருகிறது.

மஞ்சூர் சுற்றுவட்டாரத்தில் கடந்த சில நாட்களாக அவ்வப்போது பரவலாக நல்ல மழை பெய்து வருகிறது. இந்த மழையால் தேயிலை தோட்டத்திற்கு ஏற்ற சீதோஷ்ண நிலை கிடைத்துள்ளது. பெரும்பாலான தோட்டங்களில் பசுந்தேயிலை மகசூல் அதிகரிக்க துவங்கின. மஞ்சூர் பகுதிகளில் உள்ள கூட்டுறவு, தனியார் தேயிலை தொழிற்சாலைகளில் பசுந்தேயிலை மகசூல் அதிரித்துள்ளது. மஞ்சூர் பகுதிகளில் உள்ள கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் நாளொன்றுக்கு 25 ஆயிரம் கிலோ வரைக்கு பசுந்தேயிலை கொள்முதல் செய்யப்படுகிறது.

இதனால், கூட்டுறவு தொழிற்சாலை "டிரப்களில்' பசுந்தேயிலை மலைப்போல் குவிந்துள்ளது.

தேயிலை வரத்து அதிகரித்தது விவசாயிகள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தினாலும், நல்ல விலை கிடைத்தால் மட்டுமே பயன் ஏற்படும்.

### கோடை மழையால் மக்கள் மகிழ்ச்சி

தலைவாசல்: தலைவாசல் பகுதியில், பரவலாக மழை பெய்ததால், பொதுமக்கள், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.
தலைவாசல் சுற்றுவட்டார பகுதியில், சில மாதங்களாக, பருவ மழையின்றி, சுட்டெரிக்கும் வெயிலால், நீர் நிலைகள் வறண்டது. தவிர, கோடை வெயிலில், வெளியில் நடமாட முடியாமல், பொதுமக்கள் அவதிப்பட்டு வந்தனர்.
நேற்று பகல், 12.30 முதல், மதியம், 3 மணி வரை, தலைவாசல், ஆறகளூர், தியாகனூர், மும்முடி, பெரியேரி உள்ளிட்ட கிராமங்களில், பரவலாக மழை பெய்தது. அதனால், சாலை, தெருக்களில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது.
கோடை மழையால், பொதுமக்கள், விவசாயிகள் பெரிதும் மகிழ்ச்சியடைந்தனர்.

### கெங்கவல்லியில் கொட்டிய மழை

கெங்கவல்லி: கெங்கவல்லி சுற்றுவட்டார பகுதியில், பருவமழை பொய்த்து போனதால், விவசாய கிணறுகளின் நிலத்தடி நீர்மட்டம் வறண்டு, பயிர்கள் கருகியது. நீண்டகால பலன் தரக்கூடிய தென்னை, பாக்கு உள்ளிட்ட மரங்கள் காய்ந்தது.
மேலும், சுட்டெரிக்கும் வெயிலின் தாக்கம், நாளுக்குநாள் அதிகரித்து, அனல் காற்று வீசியதால், பொதுமக்கள் வெளியில் நடமாட முடியாத நிலை ஏற்பட்டது. இந்நிலையில், நேற்று மதியம், 1.05 மணி முதல், 2.25 மணி வரை, பலத்த மழை பெய்தது.
வயல்வெளியில் தண்ணீர் தேங்கியும், சாலையில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. வெயிலுக்கு இதமாக, ஒரு மணி நேரத்துக்கு மேல், மழை கொட்டித் தீர்த்ததால், விவசாயிகள் உள்ளிட்ட பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

### தர்மபுரியில் பரவலாக மழை

தர்மபுரி: தர்மபுரியில் பரவலாக மழை பெய்தது. தர்மபுரி மாவட்டத்தில் அக்னி நட்சத்திரம் முடிந்த பின் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. தர்மபுரியில் கடந்த சில நாட்களாக தொடர் மழை பெய்ந்து வந்த நிலையில், நேற்று காலையில் வழக்கம் போல் வெயில் அடித்தது.
நேற்று மதியத்துக்கு மேல் இரண்டு வானிலையுடன் மழைக்கான அறிகுறியுடன் மேகம் இருண்டது. காற்று வீசியதால், மழை ஏமாற்றியது. தொடர்ந்து மாலை 4 மணிக்கு மேல் பரவலாக மழை பெய்தது. இதனால், நகரின் தாழ்வான பகுதிகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது.

தொடர்ந்து, இருண்ட வானிலையுடன் லேசான சாரல் மழை பெய்தது. மாவட்டத்தில் பரவலாக மழை பெய்ததால், கோடை வெயில் உக்கிரம் தணிந்தது.

## அதிக ஆதாயத்தால் சோயா பயிருக்கு மாறும் விவசாயிகள் :பருத்தி சாகுபடியில் ஆர்வம் குறைகிறது : - பிசினஸ் ஸ்டாண்டர்ட் உடன் இணைந்து -

சோயா விலை ஆண்டுக்காண்டு அதிகரித்து வருவதால், ஏராளமான விவசாயிகள் அதிக பரப்பளவில் சோயா சாகுபடியை மேற்கொண்டு வருகின்றனர். குறிப்பாக, பருத்தி விலை வீழ்ச்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள், அதிக அளவில் சோயா சாகுபடிக்கு மாறியுள்ளனர்.Œõதனை'இதனால், சென்ற 2012ம் ஆண்டில், நாட்டின் சேயா சாகுபடி பரப்பளவு, முந்தைய ஆண்டை விட, 5 -7 சதவீதம் அதிகரித்து, 1.07 கோடி ஹெக்@டராக உயர்ந்துள்ளது. சோயா உற்பத்தி, இதுவரை இல்லாத சாதனையாக, 1.26 கோடி டன்னை எட்டியுள்ளது' என, இந்திய சோயா பதப்படுத்துவோர் கூட்டமைப்பின் செய்தி தொடர்பாளர், ராஜேஷ் அகர்வால் தெரிவித்துள்ளார்.பருத்தியை ஒப்பிடும் போது, சோயாவிற்கு அதிக விலை கிடைக்கிறது. இதனால், நடப்பாண்டில், சோயா பயிரிடும் பரப்பளவும், உற்பத்தியும் மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.கடந்த 2009ம் ஆண்டு முதல், சோயா விலை உயர்ந்து வருகிறது. நடப்பாண்டு, மும்பையில் சோயா விலை, சென்ற ஆண்டை விட, 19சதவீதம் அதிகரித்து உள்ளது. இது, பருத்தியை விட, 6.1 சதவீதம் அதிகமாகும்.கடந்த மூன்று ஆண்டுகளாக, பருத்தி விளையும் முக்கிய பகுதிகளில் மழை பொழிவு குறைவாக உள்ளது. இதனால், நடப்பாண்டு பருத்தி பயிரிடும் பரப்பளவு குறையும் என, புளும்பெர்க் நிறுவனத்தின் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.சோயா சாகுபடி, ஜூன் மாதம் தொடங்கும். அக்@டாபர் முதல் அறுவடை நடைபெறும்.இந்தியாவில், சோயா உற்பத்தியில், மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்கள் முன்னணியில் உள்ளன. நாட்டின் மொத்த சோயா உற்பத்தியில், மத்திய பிரதேசத்தின் பங்களிப்பு, 60 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளது.கடந்த ஆண்டு, வழக்கத்தை விட, 8 சதவீதம் குறைவாக மழை பொழிந்ததால், மகாராஷ்டிரா, குஜராத், கர்நாடகா ஆகிய மாநிலங்களில், பாசன நீர் வரத்து குறைந்தது.சோயா மற்றும் சர்க்கரை உற்பத்தியில், மகாராஷ்டிரா இரண்டாவது இடத்தில் உள்ளது. இம்மாநிலத்தின் சில பகுதிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன.'எனினும், நடப்பாண்டு, சோயா சாகுபடியில் பாதிப்பு ஏதும் இருக்காது. ஏனெனில், கரும்பை விட குறைவான தண்ணீரில், சோயாவை சாகுபடி செய்ய முடியும். மூன்று அல்லது நான்கு அங்குல மழை பெய்தால் கூட @பாதும். வழக்கமான அளவு மழை பெ#தால், சோயா சாகுபடி குறித்து கவலைப்பட தேவையில்லை' என, ரா@ஜஷ் அகர்வால் @மலும் தெரிவித்தார்.ஏற்றுமதிஆசிய அளவில், நம் நாடு, சோயா புண்ணாக்கு ஏற்றுமதியில் முன்னணியில் உள்ளது. ஈரான், ஜப்பான் மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகள், கால்நடை உணவானசோயா புண்ணாக்கை அதிக அளவில், இறக்குமதி செய்து வருகின்றன.எனினும், உள்நாட்டில் சோயா

விலை அதிகரித்துள்ளதாலும், @மலும் விலை உயரும் என்ற எதிர்பார்ப்பாலும், விவசாயிகள், சென்ற அறுவடையில், சோயாவை அதிக அளவில் இருப்பு வைத்தனர்.இதனால், சென்ற 2012-13ம் நிதியாண்டில், நாட்டின் சோயா புண்ணாக்கு ஏற்றுமதி, 11 Œதவீதம் குறைந்து, 34 லட்சம் டன்னாக சரிவடைந்தது.இருந்த போதிலும், நடப்பு செப்டம்பருடன் முடியும் சோயா பருவத்தில், அதன் ஏற்றுமதி, 40 லட்சம் டன்னை எட்டும் என, எதிர்பார்க்கப்படுகிறது.இறக்குமதிசேயா சாகுபடி அதிகரிக்கும் பட்சத்தில், நாட்டின் தாவர எண்ணெய் இறக்குமதி குறையும். இதே போன்று, நிலக்கடலை, கடுகு ஆகியவற்றின் சாகுபடி உயர்ந்தால், நாட்டின் சமையல் எண்ணெய் இறக்குமதி செலவினம் குறையும்.அதிக புரதச் சத்து கொண்ட சோயா மற்றும் அதில் இருந்து கிடைக்கும் சோயா எண்ணெய்பல்வேறு உணவுப் பொருட்களின் தயாரிப்பில் இடம்பெறுகிறது. சோயா புண்ணாக்கு, கொழித் தீவனமாகவும், கால்நடை உணவு தயாரிக்கவும் பயன்படுத்தப்படுகிறது.

## மஞ்சள் விலை அதிகரிக்க வாய்ப்பு

சென்னை: மஞ்சள் விலை, வரும் ஜூன் மாதம், மத்தியில் இருந்து உயர வா#ப்புள்ளதாக, வியாபாரிகள் தெரிவித்தனர். ஈரோடு மஞ்சள் சந்தைக்கு, ஆந்திராவில் இருந்து தரம் குறைந்த, மலிவு விலை மஞ்சளின் வரத்து அதிகரித்து உள்ளது. அதே சமயம், கடந்த ஒரு மாதமாக, இதர மாநிலங்களில் இருந்து, மொத்த வியாபாரிகளின் மஞ்சள் கொள்முதல் குறைந்துள்ளது.பண்டிகை காலம் வர உள்ளதால், வரும் ஜூன் மாதம் மத்தியில் இருந்து, மஞ்சளுக்கான தேவை அதிகரிக்கும். இதையடுத்து, வெளிமாநிலங்களில் இருந்து மஞ்சளுக்கான ஆர்டர் அதிகம் வரும் என்பதனால், அதன் விலையும் உயரும் என, மஞ்சள் வியாபாரி ஒருவர் தெரிவித்தார்.முன்பேர சந்தையில் ஒரு குவிண்டால் மஞ்சள் விலை, 6,200 ரூபாயாக சரிவடைந்துள்ளது. ஈரோடு சந்தையில், ஒரு குவிண்டால் விரலி மஞ்சள், 4,299 - 7,041 ரூபாய் வரை விற்பனையாகிறது.

இன்றைய வேளாண் செய்திகள்

31.05.2013 A.M

## வறண்டது மேட்டூர் அணை காவிரி டெல்டா பகுதியில் சாகுபடி உண்டா, இல்லையா?



தஞ்சை : காவிரி டெல்டாவில் நடப்பாண்டில் குறுவை அல்லது சம்பா சாகுபடி மேற்கொள்வதா வேண்டாமா? அல்லது மாற்று திட்டம் எதுவும் இருக்கிறதா என்பது குறித்து, அரசு உடனடியாக தெளிவுபடுத்த வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர். டெல்டாவில் தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களில் வழக்கமாக 1.30 லட்சம் எக்டேரில் குறுவையும், 4.10 லட்சம் எக்டேரில் சம்பாவும், 1.20 லட்சம் எக்டேரில் தாளடியும் சாகுபடி செய்யப்படும். ஆனால், 20 ஆண்டுகளாக போதிய நீர் இல்லாததால் சாகுபடி பரப்பு வெகுவாக குறைந்துவிட்டது.

தண்ணீர் இல்லாததால் கடந்த ஆண்டு குறுவை சாகுபடி செய்யப்படவில்லை. மிகவும் காலந்தாழ்ந்து செப்டம்பர் 17ம் தேதி மேட்டூர் அணை திறக்கப்பட்ட பின்னரே, விவசாயிகள் சம்பா சாகுபடிக்கான முன்னேற்பாடு பணிகளை துவக்கினர். மேலும், தண்ணீர் வந்த பின்னர் விதைக்கும் பணிகளை துவங்கியதால் காலந்தாழ்ந்து நடவு செய்யும் நிலை ஏற்பட்டது.

அதே சமயத்தில் மேட்டூர் அணையிலும் தண்ணீர் இருப்பு மளமளவென குறைந்து வந்தது. ஒரு கட்டத்தில் மேட்டூர் அணையிலிருந்து சம்பா சாகுபடிக்கு தண்ணீர் திறந்துவிடப்படுவது

நிறுத்தப்பட்டது. இதனால் பல இடங்களில் சம்பா பயிர்கள் காய்ந்து கருகிவிட்டன. இதனால் பெரும் இழப்பை விவசாயிகள் சந்தித்தனர். ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் இழப்பீடு கோரிய விவசாயிகளுக்கு, போதிய இழப்பீடு வழங்கப்படவில்லை. அதுவும் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் கிடைக்கவில்லை.

இந்நிலையில், நடப்பாண்டும் மேட்டூர் அணையில் தண்ணீர் இல்லாத நிலை காணப்படுகிறது. 3.78 டிஎம்சி தண்ணீரே உள்ளது. 18 அடி நீர்மட்டத்தில் 15 அடிக்கு சேறும் சகதியும்தான் இருக்கும். எஞ்சிய 3 அடி மட்டுமே தண்ணீர் இருக்கும் என்கின்றனர் விவசாயிகள். அணைக்கு தற்போது வினாடிக்கு வெறும் 72 கன அடி மட்டுமே தண்ணீர் வருகிறது. அணையில் இருந்து 600 கனஅடி தண்ணீர் குடிநீருக்காக திறந்து விடப்படுகிறது. எனவே, தென்மேற்கு பருவமழை போதிய அளவு பெய்து மேட்டூர் அணைக்கு குறிப்பிட்ட அளவுக்கு மேல் தண்ணீர் வந்தால்தான், அணையின் நீர்மட்டம் உயரும் என்ற நிலை உள்ளது.

வழக்கமாக ஜூன் 12ம் தேதி குறுவை சாகுபடிக்காக மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்படும். அதற்கு இன்னும் 11 நாட்களே இருக்கும் நிலையில், நடப்பாண்டு குறுவை சாத்தியமா என்ற கேள்வி விவசாயிகள் மத்தியில் எழுந்துள்ளது. குறுவை சாகுபடியை மேற்கொள்ளலாமா, வேண்டாமா என்பதை அரசு தெளிவுபடுத்த வேண்டும் என்று விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

ஓய்வு பெற்ற வேளாண் வல்லுனர்கள் பலர் ‘குறுவை சாகுபடி வேண்டாம்’ என விவசாயிகளுக்கு அறிவுரை கூறி வருகின்றனர். இதனால் என்ன செய்வது என்ற குழப்பத்தில் விவசாயிகள் உள்ளனர். எனவே, இது குறித்து அரசு உடனடி கவனம் செலுத்தி விவசாயிகளுக்கான சாகுபடி பரிந்துரையை அறிவிக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றனர்.

இது குறித்து ராயமுண்டான்பட்டியை சேர்ந்த ஜீவக்குமார் கூறுகையில், ‘குறுவை சாகுபடி தான் விவசாயிகளுக்கு போதிய மகசூல் தரும் பருவமாகும். இக்காலக்கட்டத்தில் தான் பயிருக்கு தேவையான போதிய சூரிய ஒளி கிடைக்கும். நெல் மகசூலும் அதிகம் கிடைக்கும். ஆனால், கடந்த ஆண்டு குறுவை பொய்த்துப்போய் 18,500 எக்டேர் தரிசாக கிடந்தது. ஒரு லட்சத்து 12,500 எக்டேர் நீரின்றி காய்ந்து போனது. 13.17 லட்சம் டன் மட்டுமே நெல் உற்பத்தியானது. அதற்கு

முந்தைய ஆண்டு நெல் உற்பத்தி 33.50 லட்சம் டன்னாக இருந்தது குறிப்பிடத்தக்கது. மழையும் மிகவும் குறைவாகவே பெய்தது. இந்த ஆண்டு பம்ப்செட் வசதியுள்ள சில விவசாயிகள் குறுவை சாகுபடியில் ஈடுபட்டாலும், நாளுக்கு நாள் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருவதால் பயிர்கள் முழுமையாக காப்பாற்றப்படுமா என்ற அச்சம் எழுந்துள்ளது.

இந்நிலையில், இந்த ஆண்டும் குறுவை இல்லை என்றால், காவிரி டெல்டா பாலைவனமாக மாறி வருகிறது என்பதற்கு, இதுதான் அடையாளம் என கருத வேண்டும். இந்நிலையை மாற்ற தமிழக அரசு மட்டுமின்றி மத்திய அரசும் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். காவிரி பிரச்னையை இரு மாநிலங்களுக்கு இடையேயானதாக பார்க்காமல் நாட்டின் உணவு உற்பத்தி, விவசாயிகள், விவசாய தொழிலாளர் நலன் சார்ந்த விஷயமாக மத்திய அரசு எடுத்துக்கொள்ள வேண்டும்.

தமிழக அரசு கடந்த ஆண்டு விவசாயிகளுக்கு ஏற்பட்ட இழப்புக்கு கர்நாடக அரசு இழப்பீடு தர வேண்டும் என வழக்கு தொடர்ந்துள்ளது. அதே சமயம், காவிரி நடுவர் மன்ற தீர்ப்பின்படி மாதந்தோறும் வழங்க வேண்டிய தண்ணீரை கர்நாடகா திறந்து விடுவதற்கான முயற்சியை அரசு எடுக்க வேண்டும். இந்த சூழ்நிலையில் விவசாயிகள் அடுத்து என்ன சாகுபடி செய்வது?. தண்ணீர் வருமா, வராதா, மாற்றுப்பயிர் ஏதேனும் சாகுபடி செய்யலாமா என்ற பெரும் குழப்பத்தில் உள்ளனர். எனவே, வேளாண் துறை, பொதுப்பணித் துறை, வருவாய்த் துறையினருடன் அரசு கலந்தாலோசித்து, விவசாயிகளுக்கு சாகுபடிக்கு தேவையான பரிந்துரைகளை உடனடியாக அறிவிக்க வேண்டும்Õ என்றார்.

கல்விக் கட்டணம் செலுத்த வழியில்லை

சுவாமிமலையை சேர்ந்த, காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்க மாவட்ட செயலாளர் சுந்தர விமலநாதன் கூறுகையில், ‘கடந்த ஆண்டு விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர்கள் சாகுபடியின்றி கடுமையாக பாதிக்கப்பட்டதால் இந்தாண்டு பள்ளி, கல்லூரிகளில் தங்கள் பிள்ளைகளுக்கு கட்டணம் செலுத்தவும் முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இத்தகைய சூழலில் தமிழகத்தை வறட்சி மாநிலமாக மத்திய அரசு அறிவிக்க வேண்டும். தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேசமயம், இந்த ஆண்டு குறுவைக்கு நடுவர் மன்ற தீர்ப்பின்படி மாத விகிதாச்சாரப்படி தர வேண்டிய தண்ணீரை

கர்நாடகம் தர வேண்டும். இதற்காக மேலும் ஒரு வழக்கினை கர்நாடக அரசு மீது, தமிழக அரசு தொடர வேண்டும்" என்றார்.

## தமிழகத்தின் பல இடங்களில் பரவலாக மழை



சென்னை : தென்மேற்கு பருவமழை 2 நாளில் தொடங்க உள்ளது. அதற்கு முன்னோட்டமாக, மாநிலம் முழுவதும் பரவலாக மழை பெய்துள்ளது. தமிழகத்தில் கடந்த ஒரு மாதமாக கோடை வெயில் கொளுத்தியது. கடும் வெயில் காரணமாக வெப்ப காற்றும் வீசியது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. கத்திரி வெயில் என்னும் அக்னி நட்சத்திரம் 28ம் தேதியுடன் முடிவடைந்ததை அடுத்து தற்போது வெயிலின் தாக்கம் குறைந்துள்ளது.

இந்நிலையில் வெப்ப சலனம் ஏற்பட்டு வளிமண்டல மேல் அடுக்கில் காற்று சுழற்சி ஏற்பட்டுள்ளது. இதனால் தமிழகத்தில் சில இடங்களில் மழை பெய்ய தொடங்கியுள்ளது. அதிகபட்சமாக குடியாத்தம், ஆலங்குடி, கந்தர்வகோட்டையில் 30 மிமீ மழை பெய்துள்ளது. கும்பகோணம், பாபநாசம், திருவிடைமருதூர், நீலகிரி 20 மிமீ, தஞ்சாவூர், ஆடுதுறை, திருவையாறு, நெய்வேலி, திருப்புவனம், வலங்கைமான் 10 மிமீ மழை பெய்துள்ளது. அதோடு ஊட்டி, சேலம் மாவட்டம் கெங்கவள்ளி, தலைவாசல், கடலூர் மாவட்டம் சிதம்பரம் ஆகிய இடங்களிலும் மழை பெய்தது. வெயி லிலும், குடிநீர் கிடைக்காமலும் தவித்த மக்கள் மழை பெய்ததால் மகிழ்ச்சி அடைந்தனர்.

சென்னையில் காலை முதல் மாலை வரை மேக மூட்டமாக இருந்தது. வெயில் இல்லாததால், இதமான சூழ்நிலை இருந்தது. கேரளாவில் தென் மேற்கு பருவமழை தொடங்கினால் கேரளாவை ஒட்டியுள்ள தமிழக மாவட்டங்களான கன்னியாகுமரி, நெல்லை, கோவை, நீலகிரி ஆகிய மாவட்டங்களில் மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது ஏற்பட்டுள்ள வெப்ப சலனம் காரணமாக தமிழகத்தில் பல இடங்களில் இன்று மழை பெய்யும். சில இடங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். ஒரு சில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

## 3வது நாளாக திருச்சியில் மீண்டும் மழை வெயில் தாக்கம் குறைந்தது

திருச்சி, : திருச்சியில் நேற்று மாலை மீண்டும் கனமழை பெய்தது. முதல்வரின் வருகைக்காக போலீசார் போக்குவரத்தை நிறுத்தி வைத்ததால் ஏராளமானோர் மழையில் நனைய வேண்டியதாயிற்று.

தமிழகத்தில் இந்த ஆண்டு கோடை வெப்பம் கடுமையாக உள்ளது. திருச்சியில் அதிகபட்சமாக 110 டிகிரி வெப்பம் பதிவானது. இதனால் அனல் காற்று வீசியதால் மக்கள் பகல் நேரத்தில் வீட்டை விட்டு வெளியே வரவே தயங்கினர். இந்நிலையில் கடந்த வாரத்தில் 2 நாட்கள் லேசான மழை பெய்து மக்களை குளிர்வித்தது.

இந்நிலையில் நேற்று மாலை 5 மணியளவில் திடீரென கனமழை பெய்ய தொடங்கியது. இரவு 7 மணி வரை விடாமல் பெய்த மழையால் சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. சாலையில் செல்ல முடியாமல், வாகன ஓட்டிகள் ஆங்காங்கே மழைக்கு ஒதுங்கினர். பின்னர் மழை குறைய துவங்கியதும் ஒரே நேரத்தில் அனைவரும் சாலைகளில் பயணிக்க தொடங்கினர். அந்த சமயத்தில் முதல்வர் ஜெயலலிதா ஸ்ரீரங்கத்திலிருந்து விமானநிலையத்திற்கு காரில் சென்றதால், பல இடங்களில் போலீசார் போக்குவரத்தை நிறுத்தி வைத்திருந்தனர்.

இதனால் ஏராளமான குழந்தைகள், முதியவர்கள் உள்பட பொதுமக்கள் மழையில் நனைந்தபடி சாலையில் நிற்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. இதனால் கடும் போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டது.

இன்றைய வேளாண் செய்திகள்
31.05.2013 A.M

## அழிவின் விளிம்பில் உள்ள தென்னை விவசாயத்தை காப்பாற்ற வேண்டும் முதல்அமைச்சருக்கு விவசாயிகள் கோரிக்கை

பனைக்குளம்

அழிவின் விளிம்பில் உள்ள தென்னை விவசா யத்தை காப்பாற்ற வேண் டும் என்று முதல் அமைச்சருக்கு விவ சாய சங்கம் சார்பில் கோரிக்கை மனு அனுப்பி உள்ளனர்.

**விமான தளம்**

மண்டபம் யூனியன் பெருங் குளத்தில் உச்சிப்புளி கடற் படை விமான தளம் உள்ளது. இந்த விமான தளத்தை சுற்றி லும் பல்லாயிரக்கணக்கான தென்னை மரங்கள் உள்ளன. இதன் மூலம் ஏராளமான விவ சாயிகளும், தொழிலாளர்க ளும் பிழைப்பு நடத்தி வருகின் றனர். தற்போது மத்திய அரசு அதிகாரிகள் இப்பகுதி மக்க ளின் வாழ்வாதாரத்தைபற்றி கவலைப்படாமல் தென்னந் தோப்புகளை அழித்து விமான தளத்தை விரிவாக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொண்டுள் ளனர்.

இப்பகுதி மக்களால் கற்பக விருட்சமாக போற்றி வளர்க் கப்படும் தென்னை மரங்களை வெட்டி அழிப்பதால் ஏற்படும் ஈடுசெய்ய முடியாத இழப்பு களை கணக்கிட்டு அரசு வழங் கும் இழப்பீட்டை வைத்து இந்த மாவட்டத்தில் விவசா யத்திற்கு பயன்படாத பல்லா யிரக்கணக்கான நிலத்தை கையகப்படுத்தி புதிதாக விமான தளம் உருவாக்கினால் எதிர்காலத்தில் மேலும் வளர்ச்சி பெற ஏதுவாக இருக்கும்.

**தென்னை மரங்கள்**

இங்குள்ள தென்னை மற் றும் பனை மரங்களை வெட்டி அழிப்பதால் பல ஆயிரக் கணக் கான மக்களின் வாழ்க்கை கேள்விக்குறியாகிவிடும். மேலும் இதனை நம்பியுள்ள இப்பகுதி மக்களுக்கு மாற்றுத் தொழில் செய்ய மத்திய அர சால் எவ்வித ஏற்பாடும், திட் டங்களும் இதுவரை அறிவிக் கப்படவில்லை. இதனால் ஏழை விவசாயிகள் வேறு எந்த வருமானமும் இல்லாமல் வாழ்வாதாரம்

கேள்விக்குறி யாகி விடும். மத்திய அரசால் கையகப்படுத்த உத்தேசித் துள்ள தென்னை விவசாய நிலங்களை முறையான கணக் கீடோ, மதிப்பீடோ செய்ய வில்லை. பாதுகாப்பு துறை சம்பந்தப்பட்டது எனக்கூறி விமானப்படை அதிகாரிகள் நேரடியாக மக்களை அழைத்து அச்சுறுத்தல் செய்து வருகின் றனர்.

ராமநாதபுரம் மாவட்டத் தில் விவசாயத்திற்கு பயன் படாத நிலங்கள் ஏராளமாக உள்ளன. அங்கு புதிதாக விமான தளம் அமைப்பதற்கு ஏதுவாக ஆய்வு நடத்துவதற்கு மத்திய அரசு நிபுணர் குழுவை அமைக்க வேண்டும். இருப்பி னும் மத்திய அரசு பிடிவாத மாக தென்னை விவசாய நிலங்களை கையகப்படுத்தும் பட்சத்தில் நிலத்திற்கு மாநில அரசு மதிப்பீட்டை விட 6 மடங்கு அதிகரித்து நிலத்திற்கு இழப்பீடு தரவேண்டும்.

**இழப்பீடு**

மேலும் சுமார் 70 ஆண்டு கள் பயன்தரக்கூடிய தென்னை மரத்திற்கு ஒவ் வொரு மரத்துக் கும் தலா ரூ.24 ஆயிரம் வீதம் கணக்கிட்டு இழப்பீடு தர வேண்டும். மேலும் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள இலவச மின்சார இணைப்புகளை சம் பந்தப்பட்ட பட்டாதாரர்க ளின் வேறு இடங்களில் நிறு விக் கொள்ள அனுமதிக்கவேண் டும். மேலும் இந்த பகுதியில் தென்னை மரங்கள் வெட்டப் படுவதால் ஏற்படும் வேலை இழப்புகளை சரி செய்ய மத் திய அரசு வழிவகை செய்ய வேண்டும். தென்னந்தோப்பு களை இழக்கும் விவசாயிக ளின் குடும்பத்தில் ஒருவருக்கு தகுதிக்கேற்ப பாதுகாப்புதுறை யில் வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும்.

மிகவும் வறட்சி மாவட்ட மாக உள்ள ராமநாதபுரம் மாவட்டத்தில் லட்சக்கணக் கான தென்னை மரங்களை வெட்டி அழித்து விட்டால் இந்த பகுதி மழையின்றி பாலை வனமாக மாறும் சூழ்நிலை ஏற்படும். எனவே இதுகுறித்து மாநில அரசு எங்களுக்காக குரல் கொடுத்து இப்பகுதி விவசாயிகளையும், தென்னை மரங்களையும் காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முதல்அமைச்சருக்கு விவசாயிகள் சார்பில் மண்ட பம் ஒன்றிய தென்னை விவசா யிகள் சங்க தலைவர் முகமது இஸ்மாயில் கோரிக்கை மனு அனுப்பி உள்ளார்.

## திருவாரூர் மாவட்டத்தில் தூர்வாரும் பணிகளை உடனே தொடங்க வேண்டும் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் வலியுறுத்தல்

திருவாரூர்

திருவாரூர் மாவட்டத்தில் தூர்வாரும் பணிகளை உடனே தொடங்க வேண் டும் என்று விவசா யிகள் குறை தீர்க்கும் கூட்டத் தில் வலியுறுத்தப்பட் டது.

**குறைதீர்க்கும் கூட்டம்**

திருவாரூர் மாவட்ட கலெக் டர் அலுவலகத்தில் விவசாயி கள் குறை தீர்க்கும் நாள் கூட் டம் நேற்று நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட கலெக் டர் சி.நடராசன் தலைமை தாங்கினார். கூட்டத்தில் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கலந்து கொண்ட விவசாயிகள் பேசிய தாவது:

பி.ஆர்.பாண்டியன்: கூட்டு றவு கடன்களை மத்திய கால கடன்களாக மாற்றி சென்ற ஜனவரி மாதம் முதல் வட்டி கடனில் சேர்க்கப்படுகிறது. வட்டி இல்லாமல் வழங்கப் பட்ட கடன் வருகிற ஆகஸ்டு மாதம் வரை கட்டுவதற்கான கால அவகாசம் உள்ளது. எனவே, வட்டியை உடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

பொதுப்பணித்துறை தூர் வாரும் பணிகளுக்கு உடன் நிதி ஒதுக்கீடு செய்து தூர் வாரும் பணிகளை உடனே தொடங்கிட வேண்டும். எலி ஒழிப்பு முகாம் ஒரே நேரத்தில் நடத்த வேண்டும்.

**மீத்தேன் வாயு**

திருவாரூர் மாவட்டத்தில் மீத்தேன் வாயு எடுப்பதால் விவசாயம் பாதிக்கப்படும் என விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்தனர். இந்நிலையில் மாசு கட்டுப்பாட்டு வாரியம் மீத்தேன் வாயு எடுப்பதற்கு அனுமதி மறுத்துள்ளது. எனவே, விவசாயிகள் சார்பில் தமிழக அரசுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

ராமகிருஷ்ணன்:நிலத்தடி நீர் இல்லாத கருப்பு பகுதியாக அறிவிக்கப்பட்ட இடங்களில் போர் போடுவதற்கு விவசாயி களுக்கு மானியத்துடன் கூடிய கடன் வழங்க வேண்டும்.

சேதுராமன்:திருவாரூர் மாவட்டத்தில் மீத்தேன் வாயு எடுப்பதை மத்திய அரசு முழு மையாக கை விட வேண்டும். ஆறுகுளங்களில் உள்ள ஆக் கிரமிப்புகளை உடன் அகற்ற வேண்டும்.

ஜெயராமன்: விவசாயிக ளுக்கு டீசல்மானியம் உடன் வழங்க வேண்டும். பயிர் காப் பீட்டுக்கான பிரிமீயம் தொகையை அரசே செலுத்தி உள்ளது. இந்த அறிவிப்புக்கு முன் பணம் கட்டியவர்களுக்கு பணம் திருப்பி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு இருந் தது. இந்த தொகையை விவசா யிகளுக்கு வழங்க வேண்டும். கோடை உழவை மேற்கொள்ள வேளாண் பொறியியல் துறை மூலம் மானியத்துடன் டிராக் டர்கள் தேவைக்கேற்ப வழங்க வேண்டும்.இவ்வாறு விவசாயிகள் பேசினர்.

## வேலூர்–திருவண்ணாமலை மாவட்டத்தில் ஆவின் பால் பொருட்களை மொத்த விற்பனை செய்ய விருப்பமா? 7–ந் தேதிக்குள் விண்ணப்பிக்க கலெக்டர் வேண்டுகோள்

வேலூர்

வேலூர்–திருவண்ணாமலை மாவட்டத்தில் ஆவின் பால் மற்றும் பால் உப பொருட்களை மொத்த விற்பனை செய்ய விருப்பம் உள்ளவர்கள் 7–ந் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும் என்று கலெக்டர் சங்கர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து வேலூர் மாவட்ட கலெக்டர் சங்கர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:–

ஆவின்

வேலூர் திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், வேலூர், காட்பாடி, ஆற்காடு, ராணிப்பேட்டை, அரக்கோணம், ஆம்பூர், குடியாத்தம், வாணியம்பாடி, திருப்பத்தூர், வந்தவாசி, செய்யார், ஆரணி, திருவண்ணாமலை ஆகிய நகரங்களில் உள்ள நுகர்வோருக்கு 340 ஆவின் முகவர்கள், 4 மொத்த பால் விற்பனையாளர்கள் மற்றும் ஆவின் கட்டுப்பாட்டில் உள்ள 19 பாலகங்களில் மூலம் சராசரியாக நாள் ஒன்றுக்கு 80 ஆயிரம் லிட்டர் பாலும், ஒரு லட்சத்து 25 ஆயிரம் மதிப்பில் மதிப்பு கூட்டிய பால் உபபொருட்களும் விற்பனை செய்கிறது.

வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் ஆவின் பால் மற்றும் பால் உபபொருட்களை மொத்த விற்பனையாளர்களை நியமித்து விற்பனை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. திருவண்ணாமலை, போளூர், செங்கம், வாணியம்பாடி, திருப்பத்தூர், ஆம்பூர், குடியாத்தம் பேரணாம்பட்டு ஆகிய நகரங்களுக்கு பால் மற்றும் பால் உப பொருட்களை வினியோகம் செய்வதற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

7–ந் தேதிக்குள்...

மேலும் ஆற்காடு, ராணிப்பேட்டை, வாலாஜா, ஆரணி, வந்தவாசி, செய்யார், சேத்துபட்டு, அரக்கோணம், நெமிலி, பனப்பாக்கம், காவேரிப்பாக்கம், வேலூர், காட்பாடி ஆகிய பகுதிகளுக்கு பால் உபபொருட்கள் மட்டும் மொத்த விற்பனை செய்ய விருப்பம் உள்ள நபர்கள் பொது மேலாளர், வேலூர்–திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய

அலுவலகத்தில் ரூ.250 செலுத்தி விண்ணப்பபடிவத்தினை பெற்று ஜூன் 7–ந் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம்.

இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கலெக்டர் சங்கர் தெரிவித்துள்ளார்.

## தலைவாசல் பகுதியில் இடி, மின்னலுடன் பலத்த மழை; விவசாயிகள் மகிழ்ச்சி

சேலம்

தலைவாசல் பகுதியில் நேற்று இடி, மின்னலுடன் பலத்தமழை பெய்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தார்கள்.

2 மணி நேரம் பலத்த மழை

சேலம் மாவட்டம் தலைவாசல் பகுதியில் நேற்று பகல் 12 மணியில் இருந்து 2 மணி வரை சுமார் 2 மணி நேரத்துக்கு பலத்த மழை பெய்தது. இதனால் தலைவாசல் பஸ் நிலையம் பகுதியில் பெட்டிக்கடை, டீக்கடைக்குள் மழைநீர் புகுந்தது. தலைவாசல் தினசரி காய்கறி மார்க்கெட்டில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த காய்கறி மூட்டைகள் மழையில் நனைந்தது. மேலும் தலைவாசல் போலீஸ்டேசன் முன்புறம் உள்ள மைதானத்தில் மழைநீர் தேங்கி குளம் போல் காட்சியளித்தது. இதில் தலைவாசல் பகுதியில் மெயின் ரோட்டில் வைக்கப்பட்டிருந்த டிஜிட்டல் பேனர்கள் சரிந்து விழுந்ததுமேலும், சுடுகாட்டின் சுற்றுச்சுவரும் இடிந்து விழுந்தது.

இந்த நிலையில் தலைவாசல், பட்டுதுறை, நாவக்குறிச்சி, சிறுவாச்சூர், வரகூர், புத்தூர், பெரியேரி, ஆறகளூர், பி.கூட்டுரோடு உள்பட பல பகுதிகளில் நேற்று பலத்த மழை பெய்தது. மழைநீர் ஊர்களில் குட்டை போல் தேங்கி நின்றது. தலைவாசலிலும் மற்றும் அதை சுற்றி உள்ள பகுதிகளிலும் கடுமையான வெயிலில் தவித்த பொதுமக்கள் மற்றும் விவசாயிகளுக்கு இந்த மழை மகிழ்ச்சியை தந்துள்ளது. கடந்த 8 மாதத்துக்கு பிறகு தற்போதுதான் பலத்த மழை பெய்துள்ளது. இதேபோல மழை தொடர்ந்து பெய்தால் குடிநீர் தட்டுப்பாடு நீங்கும். நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்தால் விவசாயம் செழிக்கும் மரங்கள் அழிவதை தடுக்கலாம் என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

## நாமக்கல்லில் ஆயிரம் மூட்டை பருத்தி ரூ.15 லட்சத்துக்கு ஏலம்

நாமக்கல்

நாமக்கல்  திருச்செங்கோடு ரோட்டில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் வியாழக்கிழமை தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. வழக்கம்போல் நேற்று நடந்த ஏலத்துக்கு நாமக்கல், புதுச்சத்திரம், எருமப்பட்டி, சேந்தமங்கலம், பவித்திரம், நாமகிரிப்பேட்டை, ராசிபுரம் என மாவட்டம் முழுவதும் இருந்தும், அண்டை மாவட்டங்களில் இருந்தும் விவசாயிகள் ஏறத்தாழ ஆயிரம் மூட்டை பருத்தியை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

இந்த பருத்தி மூட்டைகள் ரூ.15 லட்சத்துக்கு ஏலம் போனது. ஆர்.சி.எச். ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரத்து 300 முதல் ரூ.5 ஆயிரம் வரைக்கும், டி.சி.எச். ரக பருத்தி ரூ.4 ஆயிரத்து 600 முதல் ரூ.5 ஆயிரத்து 200 வரையிலும் ஏலம் போனது. இந்த பருத்தி மூட்டைகளை கோவை, அவினாசி, திருப்பூர், திருச்செங்கோடு, ஆத்தூர் பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் ஏலம் எடுத்து சென்றனர்.

தற்போது குளிர்கால சீசன் முடிவடையும் தருவாயில் இருப்பதால், பருத்தி வரத்து குறைந்து உள்ளதாகவும், ஜூன் மாதம் இறுதியில் கோடைக்கால பருத்தி வரத்து தொடங்கும் என்றும் கூட்டுறவு சங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.